# திசை
THISAI



**New Science Academy**
B. M. C. முன்பாக — JAFFNA.
**90 A/L DAY CLASS**
பிரிவு 11
ஆரம்பம்:- 15—01—90
MODAY 8-30 A. M.
**WEEKEND PAPER CLASS**
ஆரம்பம்:- 21—01—90
SATURDAY 7-30 A. M.
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)



திசை 2 | 19-1-1990 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 5-00 | முகம் 2


# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காணுமல் போவதன் மர்மம்?

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏழு உறுப்பினர்கள் திடீரெனக் காணுமல் போயுள்ளதால் அக்கட்சியின் தலைவரான சிறிமாவோ அச்சமும், அரசாங்கத்தில் சந்தேகமும், கொண்டிருப்பதாக பி.பி.சி. செய்தி கூறுகிறது.**

இதற்கிடையில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ஜே. வி. பி. புதிய சதியில் ஈடுபட்டிருப்பதாகவும், (அதுபற்றிய செய்தியை 12ஆம் பக்கம் பார்க்கவும்) அந்தச் சதியானது சகல கட்சி உறுப்பினர்களையும் கடத்துவது, கொலை செய்வது என்பதைக் கொண்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

ஜே. வி. பி. பயங்கரவாதத்தைச் சாட்டாக வைத்து அரசாங்கமே இத்தகைய வன்முறைகளையும், எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் நம்புகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் யு.என்.பி உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதன் நோக்கம் பற்றிய கேள்விக்கு ராணுவத் தளபதி பதிலளிக்கக் காட்டிய தாமதமும், எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தேகம் கொள்ளச் செய்துள்ளது.

இதேவேளை 'கறுப்புக் காகங்கள்' (களு கப்புட்டோ) என்னும் புதிய இயக்கம் கொலை, கொள்ளை, அரச உடமைகளைச் சேதப்படுத்தல் போன்றவற்றில் ஈடுபடுவோரை கொலை செய்து வருவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. பச்சைப் புலிகள், பிரா, கரும்பூனைகள் என்று இயங்கிய அணிகளுள் இவையும் ஒன்று என ஆளுங்கட்சிக்கு எதிரானவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## இந்தியப் படை விலகல்: ரஞ்சனின் ஆலோசனை

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, இந்தியப்படை இலங்கையிலிருந்து விரைவில் வெளியேறுவதற்குத் தடையாகவுள்ள பிரச்சினைகள் பற்றி இந்திய வெளியுறவு அமைச்சரோடு கதைத்துள்ளார்.

இந்தியப்படைகள் இங்கிருந்து துரிதமாக வெளியேறுவதற்கு, போதுமான கப்பல்கள் இல்லையென்றால், அவற்றை வாடகைக்காவது நாம் பெற்றுத்தரத் தயாராய் உள்ளோம் என்று, ரஞ்சன் விஜயரத்ன இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலுக்கு அறிவித்துள்ளார்.

## மதிய உணவு

சென்ற ஆண்டு மூன்றும் தவணையின் போது நிதித் தடங்கல்கள் காரணமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த மதிய உணவு, இவ்வாண்டு முதலாம் தவணை முதல் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் மீண்டும் வழங்கப்படுகிறது.

ஆனால், சோறும் கறியும் வழங்கப்படவேண்டும் என்ற பணிப்புரை இருந்தும், வடை, பணிஸ் போன்ற தின்பண்டங்கள்தான் பாடசாலைகளில் வழங்கப்படுகிறதாம்.

## தட்டுப்பாடு

யாழ். நகரில் ஒரு ரூபா முத்திரைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரு ரூபா முத்திரை, ரூபா ஒன்று ஐம்பது வரை கடைகளில் விற்கப்படுகிறது. இதேவேளை தனியார் ஏஜென்சி தபால் நிலையத்தில் சகலவிதமான முத்திரைகளும் தாராளமாகக் கிடைக்கிறதாம்

## இலங்கையின் இறைமை

கடந்தவாரம் இந்தியத் தூதுவர் எல். மெஹ்ரோத்திரா கண்டிக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது, மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரோவைச் சந்தித்தார்.

அப்போது மகாநாயக்க தேரோ இந்தியப்படை இலங்கையில் இருப்பது இலங்கையின் இறைமைக்கு இழுக்கு எனக் கருத்துத் தெரிவித்தபோது, இலங்கையின் ஐக்கியத்தைப் பேணுவதற்கு இந்தியப்படைகளே உதவியுள்ளன என்றும், சீனுவிலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இலங்கையின் இறைமை தங்கியிருக்கவில்லை என்றும் தூதுவர் பதிலளித்தார்.

## பூரண விடுதலைக்கு பெண் விடுதலை முக்கியம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி, கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பொதுக் கூட்டங்களை நடாத்திவருகிறது.

கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில் "தமிழ் மக்கள் தாங்கள் பெற்றது சுதந்திரம்தான் என்ற எண்ணம் ஏற்படும்வரை, போராட்டம் முடிந்தது என்ற பேச்சுக்கு இடமில்லை" என்று கூறினர்.

மகளிர் அணியைச் சேர்ந்த செல்வி சுந்தரி பேசுகையில் குறிப்பிட்டதாவது: "உலகின் சனத்தொகையில் பெண்கள் அரைப்பங்கினராக உள்ளனர். இவர்கள் ஆண் ஆதிக்கத்திற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும சிங்களம்

சென்ற ஆண்டு இறுதிப் பகுதியில் மாவட்ட அடிப்படையின் கீழ், ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள், தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழியான சிங்கள மொழி அறிவைப் பெறவேண்டுமாம்; ஆசிரியரின் நியமனம் உறுதி செய்யப்படுவது தொடர்பான நிபந்தனைகளில சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தியடைவதும் முக்கியமானது என்று புதிதாக நியமனம்பெற்ற ஆசிரியர்களின் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள வினைத் திறனைப் பெற்றுக் கொள்ளத் தவறினால், தாபனக் கோவையில் உள்ள சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகள் பிரயோகிக்கப்படுமாம்.

## டிப்ளோமா மாணவர் ஜனதிபதிக்கு மகஜர்

"ஏனைய பிராந்திய மாணவர்களுக்கு வழங்கும் உரிமைகளை எமக்கு வழங்கி, எமது பட்டப் பின் படிப்பு கல்வி டிப்ளோமா பரீட்சை மண்டபத்தை, யாழ்ப்பாணத்திலும் அமைக்க உடன் முயற்சிகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்."

இவ்வாறு இலங்கை திறந்த பல்கலைக்கழக வட பிராந்திய பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா மாணவர்கள், ஜனதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்பு, கண்டி, மாத்தறை போல் யாழ்ப்பாணத்திலும் பரீட்சை மண்டபம் அமையாதது பிராந்திய புறக்கணிப்பாக அமைவதுடன், டிப்ளோமா மாணவர்களாகிய தமக்கு வீண் சிரமங்களையும், இடர்களையும் தருவதாக அமைகிறது என்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நட்புறவு ஒப்பந்தம்

எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்குள் இலங்கை – இந்திய நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிடும் என்று இந்தியத் தூதுவர் எல். மெஹ்ரோத்திரா தெரிவித்துள்ளார்.

மேற்படி ஒப்பந்தம் இருநாடுகளுக்கிடையே நிலவிவந்த கசப்பைபகற்றி, புரிந்துணர்வையும் நட்பையும் வளர்க்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமைகளுக்கு பங்கம் ஏற்படாத வகையிலும் இது அமைய வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## முதல்வருக்கு அழைப்பு

வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கான அதிகாரப்பரவலாக்கம், இப்பகுதிகளின் அபிவிருத்தித் திட்டம் போன்றவை சம்பந்தமாகக் கதைப்பதற்கு, மேற்படி மாகாணசபையின் முதல்வர் அ. வரதராஜப் பெருமாளை ஜனதிபதி பிரேமதாஸ அழைத்துள்ளார்.

தற்போது ஒவ்வொரு மாகாணசபை முதல்வர்களையும் சந்தித்து, அப்பகுதி சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் தேவைகள் பற்றி ஜனதிபதி கதைத்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திசை THISAI

சந்தா விபரங்கள்
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 300/-
அரைவருடம்-ரூபா: 150/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

~~118 4ஆம் குறுக்குத்தெரு~~
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.



## வாழ்த்துச் செய்தி

திசை வெளிவரத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியாகியுள்ள இத்தருணத்தில் அப்பத்திரிகைக்கு எனது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்கள் கருத்தை உருவாக்குவதிலும், அக்கருத்துக்களின் வெளிப்பாட்டுக்கு அரங்கு அமைத்துத் தருவதிலும், பத்திரிகைகள் ஆற்றத்தக்க பயனுள்ள பணிகள் அளப்பரியவை. சரியான செய்திகளைத் தருவதுடன், ஆரோக்கியமான விமர்சனங்கள் வாயிலாக நல்ல அபிப்பிராயங்களை உருவாக்குதலும் அவசியமாகும். அத்துடன், உலகு தழுவிய புதிய சிந்தனைகளை மக்களுக்கு அறிமுகஞ் செய்தலும் வேண்டும்.

இந்தத் திசைகளில் எல்லாம் தனது பணிகளை ஆற்றி வரும் 'திசை' யின் தொண்டுகள் மேலும் சிறந்து மேம்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர்: அ. துரைராஜா
துணை வேந்தர்,
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## நடுநிலை தொடர்க

“... சரித்திர ஏட்டில் தனது கருத்தினைப் பொறித்து பத்திரிகைத் துறைக்கு எடுத்துக்காட்டாக 'திசை' பரிணமித்து ஒரு வயதினை அடைந்ததையிட்டு, குறிப்பாக ஈழமக்கள் எல்லோரும் சந்தோஷமடைகின்றோம்.

தொடர்ந்தும் நடுநிலையாகவும் யதார்த்த பூர்வமாகவும் தனது படைப்புகளைத் தாங்கி 'திசை' வெளிவந்து, ஈழமக்களுக்கு ஓர் ஒப்பற்ற வழிகாட்டியாக அமையவேண்டுமென நியாயத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் கேட்டுக் கொள்கின்றேன்.

அ. சுரேஷ்குமார்
செயலாளர்,
பொது நூலகம்,
அல்வாய் தெற்கு.

## சமாதானப் பணி

திசை பத்திரிகையின் ஒரு வருட கால சமாதானப் பணி மேலும் பலநூறு ஆண்டுகள் வளர வாழ்த்துக்கள். இந்த ஒருவருட காலமும் தங்களுடைய திசைமுகம் சமாதானத்தையே குறித்து வந்துள்ளதில், மகிழ்ச்சி. திசையில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் அனைத்தும் ஏதோ ஒருவகையில் அந்தந்தத் துறைகளுக்கு நன்மை பயப்பன என்பதில் ஐயமில்லை. என்றாலும் ... — திசையில் வரும் கட்டுரைகள் ஒரு பக்கம் முழுவதையும் அடைத்து நிற்கின்றன.

......பலவிடயங்களை மேலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். விளையாட்டு, சினிமா, உலக அரசியல், உள்நாட்டு அரசியல் ஆகியவற்றுடன் புகைப்படங்களும் பிரசுரிக்க முயற்சி எடுங்கள்; இவை தான் இப்பொழுது மக்களின் கவனத்திற்குள் கூடுதலாக இருப்பவை.

'திசையின் ஒளியினில் மனங்குளி: அதன்வழி சுதந்திரம் துலங்கவே.'

யோ. க. இந்திரன்
சாவகச்சேரி,

## இணைப்புச் சாதனமாய்

01.12.89 'திசை' கிழமை இதழை ஈழத்து நண்பர்மூலம் நேற்று, வான் அஞ்சல் வழி கரம் தழுவப் பெற்றேன். சமூக அரசியல், இலக்கிய நயம் கொண்ட 'திசை' மென் மேலும் வளர வாழ்த்துவதோடு, எட்டுத்திக்கு திசையாசவும்மலர — பரவ — மிளிர — கொணர — வேண்டும் என்பதே எமது அவாவிலும் அவா!

தெற்காசியாவில் உள்ள தனித்தன்மை கொண்ட ஈழ நாட்டிலிருந்து, தென்கிழக்காசிய மலைத்திருநாட்டிற்கு 'திசை' திரும்புவது, தமிழ் மக்களுக்குப் பெருமைதான்.

கவிதைகளுக்கு முக்கிய இடம்தரும் 'திசை', உலகத் தமிழர்களின் கைவண்ணங்களையும் இருகரம் ஏந்தி ஏற்றுச் சுவைக்க வேண்டும்; அனைத்துலக தொலைத் தொடர்புறவுக்கு முகாமையான இடம் கொடுத்து, உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் சாதனமாகத் திகழவேண்டும்.

பியாரன் ஈழ வேங்கை
லங்கூர்
மலேசியா.

## கார்த்திகேசன் வீதி

தட்டாதெருச் சந்தியிலிருந்து ஆரம்பித்து நல்லூர் பாரதியார் சிலை அமைந்துள்ள சந்தியில் முடிவுறும் தற்போதைய அரசடி வீதிக்கு 'கார்த்திகேசன் வீதி' யெனப் பெயர் மாற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளரின் யோசனையைப் பத்திரிகை மூலம் அறிந்து, தாம் பெருமைப்படுவதாக நல்லூர் (உ. அ. அ. பிரிவு) சனசமூக நிலையங்களின் தலைவர் வி. செல்வராஜா தெரிவித்துள்ளார்.

**For Sale**
Reconditioned
HONDA, CHALY
16, 3rd Cross Street,
Jaffna. C-6

**Accomodation**
Limited accomodation available for University Girl Students in a quiet residential house in the city of Jaffna.
Inquiries at -
No. 117, Main Street,
Jaffna.
Advertiser: B. J. Peter,
117, Main Street,
Jaffna. C-7

**கல்வி**
பாலர் வகுப்பிலிருந்து A. L வரை நுங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
●
G. C. E (O/L) ல் கட்டாயபாடமாகிய கணித பாடத்தினை 23 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு 2 மாதத்திற்குள் சகல போசனைகளும் நிறைவேற்றப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A. L வரை சகல பாடங்களும், SPOKEN ENGLISHம் கற்பிக்கப்படும். காலை 6 00—9.00ற்குள் சந்திக்கவும்.
க. ஆறுமுகநாதன்
10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டுக்குளி.
C-8

**CF**
We give you—
HIGH VALUE FOR YOUR MONEY
ON A MONTHLY BASIS
OR
WE ENHANCE YOUR CAPITAL AT MATURITY
**Interest Rates up to 24% p. a.**

| Principal Lines of Business | Directors |
|---|---|
| Hire Purchases / Lease Financiers. | C. Wijenaike F. B. I. M. (Chairman & Managing Director) |
| Real Estate Developers. | S. V. Wanigasekera B. Com. (Lond) F. C. A. (England & Wales). |
| Importers & Exporters | Col E. J. Divitotawela |
| Agency Operators & Distributors. | T. M. Dunuwille B. A. (Cey.) |
| Insurance Brokers. | Col. A. T. Nugawela |
| Industrialists. | A. M de S. Jayaratne B. Sc. (Econ.) F. C. A. (England & Wales). |
| | H. Molagoda B A. |
| | G. S. N. Peiris F. C. A. F. C. M. A., F. B. I. M. |
| | E. H. Wijenaike B. Com. M. B. I. M. |
| | Mrs. C. Kiriella (Attorney - at - Law, Notary Public & Solicitor) |

● OFFERS - favourable terms for settlement of old Hire Purchase Contracts.
● Provides Insurance facilities with all Companies.
● Leasing facilities now available.

**CENTRAL FINANCE COMPANY LTD.**
(Public liability Company incorporated on 5-12-1957)
250, K. K. S. Road,
Sivan Kovilady,
Jaffna.

Head Office: Kandy.
City Office: Colombo.
Showrooms: Katugastota.

Branches:- Matale, Kurunegala, Matara, Anuradhapura, & Negombo
A/14/90

**மில்க்வைற்**
விற்பனையாளர்களே,
உங்களுக்கு
விசேட பரிசுத்திட்டம்.
**மில்க்வைற் சோப்**
கட்டுகளைச் சுற்றிவரும்
தாள்கள்
பெறுமதியானவை.
அவற்றைச் சேகரித்துப் பெறுமதியான பரிசுகளைப் பெறுங்கள்.
தொடர்ந்தும் சேகரியுங்கள்.
இது காலவரையின்றித் தொடரும் ஓர் பரிசுத்திட்டம்
**“மில்க்வைற்”**
யாழ்ப்பாணம்.
A/15/90

**21ம் நூற்றுண்டை**
**துணிவுடன் சந்திக்க நீங்கள் தயாரா?**

அப்படியாயின் கொம்பியூட்டர் அறிவு சிறிதளவேனும் இன்றி வருங்காலத்தில் எந்தத் துறையிலும் பிரகாசிக்க முடியாதென்பது உலகறிந்த உண்மை.

எமது கொம்பியூட்டர் வகுப்புகளில் ஏதாவது உங்கள் துறைக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதன் மூலம் நீங்கள் சிறத்த பலனை அடையலாம்.

குறுகிய காலத்தில் குறைந்த செலவில் அனுபவமும் ஆற்றலுமுள்ள ஆசிரியர்களிடம் மிகச் சுலபமாகக்கற்று, டிப்ளோமா ஒன்றைப் பெற்று, உங்கள் வாழ்வை தாய் நாட்டிலோ அல்லது வெளி நாட்டிலோ வளம் பெறச் செய்யுங்கள்.

உங்கள் ஆற்றலுக்கும், வசதிக்கும் ஏற்றமுறையில் மிக நவீன கொம்பியூட்டர்களில் நீண்ட நேரப் பயிற்சி அளிக்கும் சந்தர்ப்பத்தை இத்துறையில் முன்னேடிகளான எங்களுக்குக் கொடுங்கள்.

உங்களை அன்புடன் அழைக்கின்றது—

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
( Leaders in Computer Education )
16, 3RD CROSS STREET,
( OLR தேவாலய மேற்குப்பக்கம் )
யாழ்ப்பாணம்.
A/11/90

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் பின்புலம்

திரவியம்

பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் 1974 தைத் திங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், காவல் துறையினரால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் ஏற்படுத்திச்சென்ற தாக்கம் இன்னமும் அப்படியே பசுமையாக உள்ளன.

மேற்படி படுகொலைகளால் உயிர் நீத்த ஒன்பது தமிழ்த் தியாகிகளது நினைவாக நிறுவப்பட்ட நினைவுத் தூண்களை ஒவ்வோர் ஆண்டும் அறியப்படாதவர்களால் அர்த்த சாம வேளையில் திருட்டுத்தனமாகத் தகர்க்கப்படுவதும், பின்னர் அவை நினைவு தினத்துக்கு முன்பாகத் தமிழ் இளைஞர்களால் மீளவும் நிறுவப்பட்டு வழமைபோல் நினைவு தின அனுட்டானங்களும், சர்வ மத வழிபாடுகளும் தொடர்வதும் ஓர் மரபாக மாறிவிட்டிருந்தது.

நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கைத் தீவில் மக்கள் செறிந்து வதியும் யாழ்ப்பாணத்தில் நடாத்துவது என்ற தீர்மானம், பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் இடம்பெற்ற மூன்றும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வைத்தே, அனைத்துலகத் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பும் மேற்படி மன்றத்தின் இலங்கைக்கிளையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை, தனது பொறுப்பை நிறைவேற்ற முற்பட்டபோது, பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியதாக இருந்தது. இலங்கைக் கிளையில் உறுப்பினர்களாக இருந்தவர்களும் தம்மை 'முற்போக்கு வாதிகள்' எனக் கூறிக்கொள்பவர்களுமான நாடாளுமன்ற இடதுசாரிப் போக்குடையோர் தாமும் பங்கேற்கப், பதவியில் அமர்ந்திருந்த முக்கூட்டரசாங்கத்தின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ அம்மையாரே ராஜாங்கத்தின் தலைவர் என்ற கோதாவில் வைபவ முறைப்படி மாநாட்டை ஆரம்பித்து வைக்க அழைக்கப்படல் வேண்டும் என்றும், பல்கலைக்கழக நுழைவுக்கு மொழிவாரி அடிப்படையில் புகுத்தப்பட்டிருந்த தரப்படுத்தல் போன்ற இன்னபிற அரசியல் சூழ்நிலைகள் காரணமாக, அவர் விஜயம் செய்யும் வாய்ப்பு இல்லாமையால், தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தாது, தலைநகர் கொழும்பிலேயே நடாத்தவேண்டும் என்றும் அடம்பிடித்து ஒற்றைக் காலில் குதியாட்டம் போட்டார்கள்.

இளம் தலைமுறையினர் உள்ளிட்ட பெரும்பான்மையினரோ, பாரிஸ் மாநாட்டுத் தீர்மானப்படி மாநாட்டைத் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வதியும் யாழ்ப்பாணத்திலேயே நடாத்தி முடிப்பது என்பதில், உறுதியாகச் செயல்பட்டனர்.

முற்போக்குவாதிகள் எனத் தமக்குத்தாமே பெயர் சூடிக்கொண்டவர்களான 'நாடாளுமன்ற இடதுசாரி' உறுப்பினர்களோ, பெரும்பான்மை உறுப்பினர்கள் மீது தம் கருத்தை வலிந்து திணிப்பதற்காக, முக்கூட்டரசின் மூலம் அரசியல் செல்வாக்கையும் அதிகார அழுத்தங்களையும் பிரயோகிக்கத் தலைப்பட்டனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டைத் தலைநகரில், கொழும்பில் நடத்துவதாயின் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் உபயோகத்தை இலவசமாகத் தருவதற்கு இசைவு தெரிவித்தவர்கள், மாறாக, யாழ்ப்பாணத்தில் நடத்த முற்பட்டபோதோ, யாழ். நகரமண்டபம், யாழ். திறந்த வெளியரங்கு, கூட்டுறவுத் துறையின் பொறுப்பில் இருந்த யாழ். வீரசிங்கம் மண்டபம், மற்றும் யாழ்ப்பாணத்தில் அரசுடமையாக்கப்பட்டிருந்த பாடசாலை மண்டபங்களையும் உபயோகிக்க அனுமதி மறுத்தார்கள்.

தனியார்துறையைச் சேர்ந்த கல்லூரி மண்டபங்களிலும், ஏனைய பிற மண்டபங்களிலும் மாநாட்டை எப்படியும் நடாத்திமுடிப்பதற்கு முற்பட்டபோதோ, அரசுடமையாக்கப்பட்டும், அரச கட்டுப்பாட்டின் கீழும் இருந்துவந்த தேசிய தினசரிகளையும், ஏனைய தொடர்பு சாதனங்களையும் பிரயோகித்து மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது அசாத்தியம் எனும் நிலையை வலிந்து தோற்றுவித்தனர். கொழும்பில் இருந்து வெளியிடப்படும் சகல தேசிய தினசரிகளும், ஏன், உள்ளூரில் வெளியிடப்பட்ட ஒரே தினசரி கூட, மேற்படி நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து, மாநாடு சம்பந்தப்பட்ட செய்திகளை இருட்டடிக்கத் தலைப்பட்டன; அல்லது, திரித்து வெளியிட்டு வந்தன.

இதனால் மாநாட்டையொட்டி நடைபெறவிருந்த பண்பாட்டுப் பொருட்காட்சியில் காட்சிக்கூடங்களை அமைப்பதற்கு, வர்த்தக நிறுவனங்கள் ஏகமாக அனைத்தும் தயக்கம் காட்டின. மாநாடு நடைபெறுமா அல்லது தடுக்கப்படுமா என்பதில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஐயப்பாடே அந்நிலை ஏற்படக் காரணமாகும்.

இக்கட்டத்தில்தான், தேசிய தினசரிகளால் இருட்டடிப்புக்குள்ளாக்கப்பட்டு வந்த, 'யாழ்ப்பாணத்தில் 1974 தை 3 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு தமிழாராய்ச்சி மாநாடு கண்டிப்பாக நடைபெறும்' என்னும் தகவல், மாநாட்டு நிர்வாகப் பணியகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தது ஏன்?

ஜே. என். தீக்ஷித்

தமிழில்: கனகு

சென்ற ஆண்டு முற்பகுதி வரை இந்தியத் தூதுவராக இலங்கையில் கடமையாற்றியவரும், தற்போது பாகிஸ்தானில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றுபவருமான திரு. ஜே. என். தீக்ஷித், அண்மையில் 'இந்தியப் பாதுகாப்பு நிலையத்' தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம், இங்கு தரப்படுகிறது.

எனது சொற்பொழிவை நான்கு பகுதிகளாக அமைக்க உத்தேசித்துள்ளேன்.

முதலாவது பகுதி, நாம் ஏன் இலங்கைக்குச் சென்றோம்; அங்கு நமது ஈடுபாடு எத்தகையதாயிருந்தது? இரண்டாவது பகுதி, நாம் சம்பந்தப்படுவதை நிர்ப்பந்தித்த உட்காரணிகள் எவை? மூன்றுவதாக, இந்திய அமைதிப் படைக்கு ஒப்படைக்கப்பட்ட பணியினை — இத்தகைய பணி, மக்களாலும் இந்திய அரசாங்கத்தினாலும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது இதுவே முதற் தடவை — அது எவ்வாறு நிறைவேற்றியது என்பது பற்றியதாய் அமையும். நான்காவது பகுதி, கடந்த 6 – 8 மாதங்களாக இலங்கையில் உருவாகியுள்ள அரசியல் வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படையில், ஆருடமாக அமையும்.

இலங்கையிலே தமிழ்ப் போராளி இயக்கங்கள் தோன்றியமையானது, பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்துக்கு எதிராக மேற்கொண்ட திட்டமிட்ட, தொடர்ச்சியான, ஒருங்கிணைக்கப்பட்ட பாரபட்சங்களின் விளைவாகவே.

இலங்கையின் மக்கள் தொகையில் தமிழ்பேசும் மக்கள் 18 வீதத்தினர் என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. அது மட்டுமல்ல, அவர்களின் படிப்பறிவு வீதமும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வல்லமையும் ஏனையவர்களைவிடக் கூடுதலானவை. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திலும் அதற்கு முன்னரும் இக்காரணிகள் அவர்களுக்கு அனுகூலமாக அமைந்தன. ஆனால் இலங்கை சுதந்திரமடைந்ததும், இதே காரணிகள் அவர்களுக்குப் பாதகமானவையாக மாறின. 1948 லிருந்து தமிழர்களுக்கெதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பாரபட்சக் கொள்கைகளால், போரை ஒத்தநிலை உருவாகிற்று. தமது இலட்சியங்களை அடைவதற்கு வன்முறையைத் தவிர வேறு வழியே இல்லை, என்ற நிலைக்கு ஒவ்வொரு தமிழரும் தள்ளப்பட்டனர். இந்தப் பின்னணியில்தான், நாம் எவ்வாறு இதில் சம்பந்தப்படவேண்டியேற்பட்டது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

நாம் இலங்கைக்குச் சென்றதற்கான முதற்காரணம், எமது சொந்த ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதில் நாம் கொண்டிருக்கும் அக்கறையே. இலங்கைத் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் ஏற்பட்ட எதிர் விளைவுகள், எமது நாட்டைப் பாதித்தன. இந்தியக் குடியரசிலே, பிரிந்து செல்லும் கோரிக்கை முதன் முதலாக முன்வைக்கப்பட்டது, 1960 இன் நடுப்பகுதியில் தமிழகத்திலேயே என்பதை, நாம் மறக்கக்கூடாது. அங்கும் தமிழ் மொழி — தமிழ் இனத்துவம் என்ற கோட்பாடே முன்வைக்கப்பட்டது. எனவே, இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் நாம் காட்டிய அக்கறை எமது சொந்தநாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டினையும் தொடர்ந்தும் பேண வேண்டும் என்ற அடிப்படையிலேயே.

இரண்டாவது காரணம், தமிழர்களின் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டியிருந்தது. இலங்கை அரசாங்கம் — உண்மையில் சிங்கள அரசாங்கம் — தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு வெளிநாட்டு உதவிகளை நாடியது. பிரித்தானிய கூலிப்படைகளையும் — கீனிமீனி —, இஸ்ரேலிய 'சின்பெத்'தையும் 'மொஸாட்'டையும், பாகிஸ்தானின் உதவியையும் அது நாடியதால், எம்முடைய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலையை உருவாக்கிற்று! வொயிஸ் ஒவ் அமெரிக்காவிற்கு இலங்கை அளிக்கவிருந்த ஒலிபரப்பு வசதிகள், எமது இரகசிய தகவல்களை அவர்கள் தமது நன்மைக்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலையினையும், உருவாக்கிற்று. இத்துடன், எம்மோடு நல்லுறவு கொண்டிராத நாடுகளிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவும் செய்தது.

மூன்றுவது காரணம், இந்தியாவைப் பொறுத்தவரை மிக முக்கியமான உள்நாட்டு அரசியல் காரணி. ஐந்துகோடி இந்தியத் தமிழர்களின் உணர்வுகளை நாம் மதித்தே ஆக வேண்டும். இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக நாம் செல்லாவிட்டால், இந்தியாவின் ஒரு பகுதியாக நாம் ஏன் இருக்கவேண்டும்? அதனால் என்ன பயன்? என்ற கேள்விகளெல்லாம் அவர்களின் மனங்களில் எழலாயின. மக்களால் தெரியப்பட்ட எந்த அரசாங்கமும் இந்த நிர்ப்பந்தங்களுக்கு இணங்கவே வேண்டும்.

எமது நடவடிக்கைகளால் இலங்கைத் தமிழர்களின் இலட்சியங்கள் எந்தளவிற்கு நிறைவேறின என்பதைப் பார்ப்போம். நான் இங்கே அரசியல் அம்சங்களைப் பற்றி மட்டுமே பேசுவேன். தமிழர்கள் நான்கு கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்: I: வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும். II: இந்தப் பகுதிகள் ஒரே மாகாணமாக இணைக்கப்பட வேண்டும். III: இந்தப் பகுதிகளை போதிய அதிகாரங்கள் கொண்ட, சுயாட்சி உரிமையுடைய தமிழ் அரசாங்கம் ஆளவேண்டும். IV: நிதி, காணி, குடியேற்றம், சட்டம் ஆகியவை இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். 1987 ஜூலை 29 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தம் இந்த அடிப்படை இலட்சியங்களை நிறைவேற்றுகிறது.

நிதி, சட்டம், காணிக்குடியேற்றம், போன்ற துறைகளைப் பொறுத்தவரை, தமிழருக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கம் மேலும் சீராக்கப்படவேண்டும். இந்த ஒப்பந்தம் எமது அக்கறைகள் சிலவற்றைத் தீர்த்ததுடன், இந்த நெருக்கடி நிலை உருவாகுவதற்கான அடிப்படைக் காரணிகளையும் அகற்றியிருக்கிறதெனக் கருதுகிறேன்.

(வளரும்)

# அன்ட்ரி சக்கரோவ் —

## பௌதிக அணு விஞ்ஞானி மனித உரிமைப் போராளி !



அன்ட்ரி சக்கரோவ் 14/12/89 இல் தனது 69 வயதில் மொஸ்கோவில் காலமானார். உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஓர் விஞ்ஞானியாக இந்நூற்றுண்டில் திகழ்ந்த அவரின் பூதஉடல், மொஸ்கோவில் உள்ள 'சோவியத் அக்கடமி ஒவ் சயன்சி'ல் வைக்கப் பட்டு, பின் மொஸ்கோவின் ஓர் சவக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. தனது கணவரது மறைவு சோவியத் யூனியனில் ஏதாவது கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடாது எனவும், அதனுல் நண்பர்களும் உறவினர்களும் அடக்கத்தில் பங்கேற்கத் தேவை இல்லை என்றும், திருமதி சக்கரோவ் தொலைக்காட்சியில் கூறியிருந்தும்கூட, லட்சக்கணக்கானேர், மிகமோசமான காலநிலையிலும், இறுதிமரியாதைசெலுத்தினர். சோவியத் பத்திரிகை ஒன்று அண்மையில் நடத்திய ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பின்படி, அவரே அந்நாட்டின் மிகவும் பிரபலமான பிரமுகர் என்பதை இந்நிகழ்ச்சி காட்டி உள்ளது.

### அணு விஞ்ஞானி

இவர் ஓர் பௌதிக அணு விஞ்ஞானியாகவும், மனித உரிமைகள் தலைவராகவும், தனது கடைசி நாட்களில் ஒரு அரசியல்வாதியாகவும் திகழ்ந்தவர். இப்படியாக மூன்று துறைகளிலுமே மிகவும் உயர்ந்த இடத்தினை அடைந்த ஒருவரை உதாரணம் காட்டுவது கூட மிகவும் கடினமானதாகும். அணு விஞ்ஞானத் துறையில் அமெரிக்காவை விட மிகவும் பின் நின்ற தனது நாட்டை அதற்கு இணையாக்க, தனது 26 வயது முதல் மிகவும் பாடுபட்டவர். இவரும் சகாக்களும் இணைந்து 1949 இல் ரஷ்யாவுக்கான அணு குண்டையும், 1953 இல் ஐதரசன் குண்டையும், கண்டுபிடித்தனர். இவர் ரஷ்ய ஐதரசன் குண்டின் தந்தை எனவும் வர்ணிக்கப்படுபவர், தனது 32 வயதில் சோவியத் நாட்டின் மிக உயர்ந்த விஞ்ஞான விருதான அக்கடமி ஒவ் சயன்சின் பூரண அங்கத்தவர் பதவியும், 3 முறை அந்நாட்டின் மிக உயர் விருதான லெனின் விருதையும் பெற்றவர். பௌதிகத்துறையில் 'ஐதரசன் உருகல்' (Hydrogen Fusion) இல் இவர் கண்டுபிடித்த உபகரணமே ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் உபயோகிக்கப்படுகிறது. அத்துடன் புவியீர்ப்பில் ஐன்ஸ்டீன் கோட்பாடுகளை ஆதாரமாகக்கொண்டு, பலபுதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவர் மேலும், 'பாரட்டிக்கல் பிசிக்ஸ்' (Particle Physics) இல் புரத்தன் டீக்கே (Proton Decay) பகுதியில் அவர் மேற்கொண்ட ஆய்வுகள், உலகப் பிரசித்தி பெற்றவை.

### தீங்குகளில் கவனம்

இவை எல்லாவற்றையும் அறிந்தும், செயல்பட்டும் கூட, அவற்றில் மட்டுமே அமிழ்ந்துவிடாமல், அணுப் பௌதிகத்தால் ஏற்படும் தீங்குகள் அவரை மிகவும் பாதித்தன. ஒரு நாள் இவை மனித குலத்துக்கும், ஏன் பூமிக்கும் தீங்கையே விளைவிக்கும் என்றும், மற்ற சோவியத் விஞ்ஞானிகளிடம் இருந்து மாறுபட்ட விதத்தில் கூறத்தொடங்கினர். சமீபத்தில் அணுக் கசிவு சோவியத் அணுமின் நிலையம் ஒன்றில் ஏற்பட்ட போது, வருங்காலங்களில் அவை பூமிக்கடியில் நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

### குருச்சேவின் ஆட்சியில்

ஸ்டாலின் காலத்தின்பின் பிரதமராக இருந்த குருச்சேவின் காலத்திலேயே, மனித உரிமைகள் பற்றிய அவரது கருத்துக்கள் வெளியாகின. குருச்சேவின் கல்விக் கொள்கையையும், அணு ஆயுதத் திட்டத்தையும் குறை கூறியும், வேறு பல விடயங்களில் உடன்பாடான கருத்தையே கொண்டிருந்தார். ஸ்டாலினுல் ஏற்படுத்தப்பட்ட 'வேலை முகாம்கள்' குருச்சேவ் காலத்தில் அழிக்கப்பட்டதே இதற்கான காரணமாகும். 1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், இவரது பாராட்டுக்கடிதம் படித்துக் காட்டப் பட்டது. பின் 1963 இல் குருச்சேவ்கவிழ்க்கப்பட்டபின், ஸ்டாலினின் முறைகளில் மாற்றம் சோவியத் யூனியனில் மெதுவாக நடைபெறத் தொடங்கியது. கொம்யூனிஸ்ட் கட்சியின் 21ஆவது மத்திய கூட்டம் 1966 இல் நடந்தவேளை, இவரும் சோவியத்யூனியனின் எல்லா அக்கடமிகளின் 25 அங்கத்தவர்களும் சேர்ந்து ஓர் எதிர்ப்பு அறிக்கையைக் கொடுத்தனர். இதில் கட்டாயவேலை முகாம்களில் இருந்து வெளியே வந்தவர்களுக்குப் புனர்வாழ்வு அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று விநயமாகக் கேட்கப்பட்டிருந்தது. ஆயினும் பிரஷ்நேவ் அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதற்காக மிகக் குறைந்தபட்சம் அறிக்கை ஒன்று கூட வெளியிடப்படவில்லை. இவற்றுல் அவரது அரசியல் மனச்சாட்சி கேள்விகளைக் கேட்கத் தொடங்கியது. சோவியத் பௌதிக அணுத் துறையில் மிகவும் வேண்டப்பட்டவர் என்பதால் இவரது இவ் வகையான முயற்சிகள் அவருக்கு அதிக துன்பங்களை உண்டாக்கவில்லை. இக் காலகட்டங்கள் பல தரப்பட்ட சர்வதேச பிரச்சினைகளிலும் ஈடுபடநேர்ந்தது' 1968 இல் செக் நாட்டை ரஷ்யா ஆக்கிரமித்த போது இது அவரிடமிருந்து எதிர்ப்பாக வெளிப்பட்டது. பல அறிக்கைகளை வெளியிட்டார். இதன் பின், எப்போதும் ரகசிய பொலிசின் கண்காணிப்புக்கு உட்பட்டார்.

### மனித உரிமைகள் அமைப்பு

1970 இல், இவரும் இவரது தோழர்களான இரு சோவியத் விஞ்ஞானிகளும் சேர்ந்து மனித உரிமைகள் அமைப்பு (Committee for HumanRights) என்ற அமைப்பை உருவாக்கினர். சோவியத்யூனியனில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை அது வெளியிட்டது. இதனுல் சோவியத் பத்திரிகைகள், அவரைத் துரோகி எனவும், மேற்குநாடுகளின் ஒற்றன் எனவும், வர்ணித்தன. இக்கால கட்டத்தில் அவர் வெளிநாட்டு நிருபர்கட்குக் கொடுத்த பேட்டி, பின் வெளிநாட்டு வானொலிகளால் ரஷ்யமொழியிலும் ஆங்கிலத்திலும் திரும்பவும் ரஷ்யாவுக்கு ஒலிபரப்பப்பட்டன. இதன் பின், பல முக்கிய விஞ்ஞான ஆராய்ச்சிகளில் அவர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 'சோவியத் அக்கடமி ஒவ் சயன்ஸ்', தான் கொடுத்த விருதுகளை திரும்ப எடுக்கும் முயற்சியில் இறங்கியது. வருடத்தில் ஒரு முறை நடக்கும் அதன் மத்திய கூட்ட அமர்வில், இதற்கான பிரேரணை கொண்டு வரப்பட ஏற்பாடாகி இருந்தது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அவரது சக விஞ்ஞானிகள் இது நடைபெற இடம் தரவில்லை. மேலும், அவர்கள் கூட்டாகவிடுத்த அறிக்கையில், இது போன்ற ஒன்று முன்பு ஐன்ஸ்டீனுக்கு மட்டும் ஹிட்லரால் செய்யப்பட்டது. என்று சுட்டிக்காட்டியதால், அம்முடிவு செயல்படுத்தப்படவில்லை.

சு. மகேந்திரன்

### நோபல் பரிசு

1975 இல் அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. தனது சொந்த நலன்களையும், உயிரையும் கூடப் பொருட்படுத்தாமல் மனித உரிமைகளுக்காகப் போராடியதற்காக, இது கொடுக்கப்பட்டது. பரிசைப் பெற, அவர் சோவியத் யூனியனை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. தலை சிறந்த விஞ்ஞானியாகையால் திரும்பமாட்டார் என அரசு கருதியது. அவரது மனைவி சென்று பரிசைப் பெற்று, அவரது அறிக்கையை வாசித்தார். சமாதானம், சுபீட்சம், மனித உரிமைகள் மூன்றும், ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. இவைகளில், மனித உரிமைகளை மறுத்தால் மற்ற இரண்டையும் விட்டுவிட வேண்டும் என்று கூறி இருந்தார். உலகில் பல பாகங்களில் சமாதானத்தை உண்டாக்க வேண்டுமாயின், அப்பகுதியில் காணப்படும் மனித உரிமை மீறல்கள் களையப்பட வேண்டும். இது சோவியத் யூனியனிலேயே முதலில் உண்டாக்கப்பட வேண்டும், என்ற கருத்துக்கள் அவ்வறிக்கையில் இருந்தன.

### நூல்கள், எழுத்துக்கள்

அவரது சிறிய நூலாகிய முன்னேற்றம், சகவாழ்வு, அறிவுச் சுதந்திரம் (Progress, Co-Existence, Intellectual Freedom) வெளிநாடுகளில் 1968இல் பிரசுரிக்கப்பட்டது. அதில்அமெரிக்காவுடன்சேர்ந்து ஆயுத ஒழிப்பு, மூன்றும் உலக நாடுகளின் பசிப்பிணியைத் துடைத்தல், உலகம் மாசுபடுதல் என்பனவற்றில், சோவியத் யூனியன் ஈடுபட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது. குளிர் யுத்தம் ( Cold War ) நடைபெற்றுக் கொண்டிருந்த அக்காலகட்டத்தில் இரு அரசுகளையுமே அது கவரவில்லை. அவரது கருத்துக்கள் ரஷ்யாவில் அதிகாரபூர்வமாக அக்காலத்தில் பிரசுரிக்கப்படவில்லையாகிலும், அவை இரகசியமாக பலராலும் வாசிக்கப்பட்டே வந்துள்ளது. ஸ்டாலின் காலத்தைய கொடுமைகளை முழு அளவில் வெளிக்கொணர வேண்டும் என்ற கருத்தில், நடந்த உண்மைகளை முழுவிபரங்களுடன் வெளியிட்டார். அரசியல் கொலைகள், விவசாயிகளை அடக்கி வேலை முகாம்களில் இட்டது, நாட்டின் சிறுபான்மை இனங்களை மேலும் சிறுபான்மை ஆக்கியது, போன்ற விடயங்கள் மிகவும் விளக்கமாக வெளியிடப்பட உதவினுர்.

### கோர்க்கியில் முடக்கம்

1980 இல்ஆப்கானிஸ்தானில் ரஷ்யா நுழைந்ததை வன்மையாக எதிர்த்தார். வெளிநாட்டு நிருபர்கட்கு மூடப்பட்ட நகரமாகிய கோர்க்கிக்கு அனுப்பப் பட்டார். அக்காலத்தில் அவரது அந்தரங்க வாழ்க்கை படமாக்கப்பட்டு, மேற்கு நாடுகளில் காட்டப்பட்டது அவர்கள் நினைக்கும் உயர்ந்த மனிதர் அவர் அல்ல எனக் காட்டவே, இப்படிச் செய்யப்பட்டது. இக்காலகட்டத்தில் அவர் பலமுறை உண்ணுவிரதம் இருந்தார். 1984 இல் அவரது மனைவி மிக மோசமான முறையில் இருதய, கண் வியாதிகளால் துன்பப்பட்டார். வைத்திய சிகிச்சைக்கு மேற்கு நாடுகட்கு அவரை அனுப்ப அரசுமறுக்க, நீண்ட உண்ணுவிரதமிருந்தார். பல மேற்கு நாட்டு விஞ்ஞானிகளின் முயற்சியால் சோவியத் பிரதமர் பின்னர் அனுமதி அளித்தார்.

### மீண்டும் மொஸ்கோவில்

1986 இல் பிரதமர் கொர்பச்சேவ், மொஸ்கோவில் வாழ மீண்டும் இவருக்கு அனுமதி அளித்தார். இவ் விடுதலையே கிழக்கு ஐரோப்பாவில் இன்று நடைபெறும் எல்லா மாற்றங்கட்கும் முன்னேடி என்கின்றனர் அய்வாளர். சோவியத் பிரதமரின் சீர்திருத்தத் திட்டங்களை ஆதரித்தார். ஆயினும் அரசியல், மத உரிமைகள் காரணமாக சிறைவைக்கப்பட்டவர்கள் அனைவரும் உடனே விடுதலை செய்யப்படவேண்டும் என்று, அப்போது ஒரு டெலிபோன் கருத்துரையாடலில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்துக்குக் கூறினுர். "எமது நாட்டில் நடைபெறும் சீர்திருத்தங்கள் உண்மையான அர்த்தம் கொண்டவையாயின் இது உடனே செய்யப்பட வேண்டும். எல்லாம் திறக்கப் பட்டு விட்டது என்று கூறுவது, அதை திறக்க விரும்பியவர்கள் சிறையில் இருக்கும் போது, கேலிக்கிடமானது. உள் நாட்டில் மட்டுமல்லாமல் வெளி உலகமும் இதனை எதிர் பார்த்து உள்ளது. இதனுல் மேல் நாட்டு மக்கள் எம்பக்கம் கவரப்படுவார்கள், மற்றைய விடயங்களையும் கூட்டாக அணுகமுடியும்", இதன் பின் எல்லா மனச்சாட்சிக் கைதிகளும் பெரும்பாலும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனுல் இதன் பின், இது ஜனநாயகத்துக்கான ஆரம்பக் கட்டமே என்ருர். □

---

ரவி : நான் என்னுடைய கடிகாரத்தை இந்த நீரோடைக்குள் மூன்று வருடங்களுக்கு முன்போட்டேன், அது இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது.

சண் : அதே கடிகாரமா ஓடிக்கொண்டிருக்கிறது.

ரவி : இல்லை, நீரோடை !

நன்றி: ஆண்டு – 9
ஆங்கிலப் பாட நூல்

# ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிக்கு
# துணைநிற்கும் உளவியல்

செவ்வி கண்டவர்: க. சுகுமார் M. B. B. S.
கொடுத்தவர்: சா. ம. செல்வரட்ணம் அ. ம. தி.
கரவையூர் செல்வம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

## சமூகப் பிரச்சினைகள்

**கேள்வி 9 : ஒரு சமுதாயத்தில் மிக அதிகமாகக் காணப்படும் உளப் பிரச்சினைகள் என்ன?**

பதில் : இக்கேள்வி மிக விரிவானது. முதலில் நீங்கள் எந்தச் சமூகத்தை மனதில் வைத்துக் கேட்கிறீர்களென்பது புரியவில்லை! ஆனால், பொதுவாக (விஞ்ஞான வழி நின்று ஆய்வு செய்யாது) எமது சமூகத்தைக் கணிப்போமானால், பல உளப் பிரச்சனைகளை கோடிட்டுக் காட்டலாம். எமது சமூகம் தற்பற்று நோக்குடைய (Individualistic) ஒரு கடுமையான ஒழுக்கக் கோட்பாட்டைத் திணித்து வளர்ந்த சமூகம், இன்று வெடித்துப் பிளக்கின்றது. இதனால் ஏற்படும் தாக்கங்கள். அன்பு, கருணை, ஆதரவு, உறவு போன்றவற்றிற்காக ஏங்கி நிற்கும் மக்கள் அனுபவிக்கும் உளவியல் தாக்கங்கள்: பெரும் இழப்புக்களினால் பாதிக்சப்பட்ட மக்களின் சோகம், மனக் குமுறல்கள், மன அழக்கம், வன்செயல்களினால் பாதிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட அடக்கி வைத்திருக்கும் கோபம், வன்மம்; இயலாமையினால் உருவான விரக்தி, வெறுப்பு; வாழ்க்கையில் அர்த்தம் காணாததினால் ஏற்படும் தனிமை, வெறுமை; கணவன் மனைவியிடையே தொடர்பின்மையினாலும், பகிர்தலின்மையினாலும் ஏற்படும் பிரிவுகள், பல்வேறு பிரச்சினைகள்; பிள்ளைகள் — பெற்றோரிடையே ஏற்படும் புரிந்துணராமை; முதியோரின் தனிமை, ஒரு வேண்டப்படாத உணர்வினால் ஏற்படும் தள்ளிவைக்கப்பட்ட தன்மை — என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

**கேள்வி 10 : இன்றைய உலகத்தில் எங்கு பார்த்தாலும் யுத்த மேகங்களே சூழ்ந்துள்ளன. இதற்கான மூல காரணங்கள் (root-causes) என்ன என்று நினைக்கிறீர்கள்?**

பதில் : இதுவும் ஒரு பரந்த கேள்வி. ஒரு முக்கிய மூல காரணம்: அதிகாரம் — ஆணவம் — அரசியல் ஆட்சி (authority — arrogance and political power). மற்றவர்களை அடக்கி ஆளவேண்டுமென்ற ஓர் ஆசை மனிதர்களில் உண்டு. இந்த ஆசை வெறியாக உருவெடுக்கும்பொழுது வன்செயலில் ஈடுபடுகின்றார்கள். இப்படிப்பட்ட வெறிகளுக்கும் ஆசைகளுக்கும் அடிமையாவோர் மனித வளர்ச்சி பெற்றோரல்லர். இன்னுமொரு முக்கிய காரணம்: பொருளாதார வேறுபாடுகளும்முரண்பாடுகளும். சுரண்டி வாழ்வோர் இருக்கும் வரை சுரண்டப்படுவோர் போர் தொடுப்பார்கள். இன்னும் பல காரணிகளை நாம் இனங் கண்டு கொள்ளலாம். இக்காரணங்கள் சிலவற்றிற்கும் உளவியலுக்கும் தொடர்புண்டு.

## இளைஞர்கள்

**கேள்வி 11 : பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இளைஞர்கள் சமுதாயத்திற்கும் இன்றைய இளைஞர்களுக்கும் என்ன வேறுபாட்டைக் காண்கிறீர்கள்?**

பதில் : ஆய்வின் ஆதாரமின்றி மேலெழுந்தவாரியாகவே பதில் சொல்லுகின்றேன். இன்றைய இளைஞர்களில் போட்டி மனப்பான்மை கூடியுள்ளது. பல்கலைக்கழக அனுமதி முறைகள் மாறினதும், வேலைவாய்ப்புகள் அரிதாகியதும் இதற்குக் காரணங்கள் : எப்படியாவது பிழைத்தெஞ்சி நிற்க வேண்டுமென்ற உள்ளார்ந்த உந்துணர்வு (Survival instinct) அதிகமாக வெளிப்படுகின்றது. அதற்காக அசாத்தியத் துணிவுடன் செயல்படும் ஒரு இளம் சமுதாயத்தைப் பார்க்கின்றேன். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னர் ஆயுதம் தூக்கிய ஒரு இளந் தலைமுறையைப் பார்க்கின்றேன். வன்செயல்களில் மிக இலகுவாக மூழ்கிவிட்ட ஒரு இளம் சமூகத்தைக் காணக்கூடியதாகவே உள்ளது. காலாகாலமாகக் கட்டிக்காத்த சில சம்பிரதாயங்கள் பழக்கவழக்கங்கள், சில பண்பாட்டுக் கூறுகள், தூக்கி எறியப்பட்ட ஒரு நிலையைப் பார்க்கின்றேன். ஒரு வன்மைமயமான (arrogant) சமூகம் உருவாகி வருவதைப் பார்க்கின்றேன். அதேவேளை, தம்மை இச்சமூகத்தின் சேவைக்கென அளிக்கக்கூடிய இளைஞர்களையும் யுவதிகளையும் பார்க்கின்றேன். கல்வியில் அதிகளவு ஆர்வங்காட்டும் ஒருதலைமுறை தோன்றியுள்ளது.

**கேள்வி 12 : கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்காவின் வைத்தியசாலையில் உளவியல் நிபுணராகக் கடமையாற்றி, பல ஆயிரக்கணக்கானவர்களின் உளப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டுள்ளீர்கள். அவ்வகையில் உங்கள் அனுபவத்தைக் கொண்டு இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பதில் : முதலில் "ஆயிரக்கணக்கானவர்கள்" என்பது மிகைப்படுத்தப்பட்டதொன்று. உளவியல் வழிநின்று சிலருடன் ஓர் ஆழ்ந்த வாழ்க்கைப் பயணத்தை வட அமெரிக்காவில் நான் மேற்கொண்டது உண்மை. இதனால் நான் பெரிதும் வளர்ந்துள்ளேன். இங்கு, இளைஞர்களுடன் நான் பழகியது இன்னமும் போதாது. ஆனால், இளம் தலைமுறையில் எனக்கு நம்பிக்கையுண்டு. அவர்கள் ஆற்றல் நிறைந்தவர்கள். சமூகத்திற்குப் பயனுள்ளவற்றைச் செய்யவேண்டுமென்று துடிப்பவர்கள். இவர்களுக்கு நான் என்ன சொல்ல? எமது சமூக அமைப்புகள் பல மாறவேண்டும். ஒருங்கிணைந்த கல்வியை நாம் பெறவேண்டும். நாம் ஒவ்வொருவரும் முழுமனிதர்களாக வளர முயல வேண்டும். தொடர்புகளை உருவாக்கி உறவுகளை வளர்க்க வேண்டும். வெறும் வாய்ச் சொல்லில் நின்று விடாது எமது இனத்தைப் பிரிக்கும் சாதி, சமய வேறுபாடுகளை விட்டு விட வேண்டும். அர்த்தமற்ற சம்பிரதாயங்கள், ஆச்சாரங்கள், பழக்க தோசங்களை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் வளர, எமது உறவுகள் ஆழமாக வளர, சமூகம் வளரும். இளைஞர்கள் முன்னின்று இவற்றைத் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்காவிடில், எமது சமூகம் மேலும் சீரழியும். சமூகத்திற்குத் தம்மை அர்ப்பணிக்கக் கூடிய அறிவும் ஆற்றலும் மனிதாபிமானமும் கொண்ட இளைஞர்கள் முன் வர வேண்டும். அத்துடன், முக்கியமான குழுக்களாக இணைந்து பணிபுரியக் கூடிய (Team work) அளவிற்கு, நாம் வளரவும் வேண்டும்.

## ஆளுமை

**கேள்வி 13: உளவியலில் குறிப்பிடப்படும் ஆளுமை (Personality) என்றால் என்ன? அது ஒரு மனிதனில் எவ்வாறு உருவாக்கப்படுகிறது?**


பதில் : ஆளுமை என்று நாங்கள் உளவியலில் குறிப்பிடுவது — ஒரு மனிதன் அன்றேல் மனுஷி தன்னைத் தானே அறிந்து, புரிந்து, ஏற்றுக் கொண்டு, தனது சிந்தனையையும் உணர்வுகளையும் ஒருங்கிணைத்து வாழும் ஒரு வாழ்க்கையில், ஒருவன் / ஒருத்தி கொள்ளும் தன்னுணர்வில் தோன்றும் அகமும் புறமும் இணைந்த ஒரு மனித தோற்றம். மேற் கூறியன அத்தனையும் ஒரு வாழ்க்கைப் பயணம். இது திடீரென்று ஒரு நாள் தோன்றுவதல்ல. வாழ்ந்து, வாழ்ந்து நெறிப்படுத்தி, ஆற்றுப்படுத்தி வளர்க்கும் ஒரு மனித வாழ்வு. சுயமாக இப்படி ஒரு நிலைக்கு வந்து வளர்வது பெரும்பான்மையான மக்களுக்குக் கடினம். இங்குதான் உளவளத்துணை கைகொடுத்து உதவுகின்றது.

## எம்முள் ஒரு குழந்தை

**கேள்வி 14 : "அன்றைய நாளைக் காட்டும் காலை நேரம் போல, வருங்கால மனிதனைக் காட்டுகிறது குழந்தைப் பருவம்" எனக் கூறினார் ஓர் அறிஞர். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" எனப் பாடினார் ஓர் சினிமாக் கவிஞர். உளவியலாளரான உங்கள் கருத்து என்ன?**

பதில் : கவிஞனின் கூற்றில் ஆழ்ந்த உளவியல் உண்மை உண்டு. ஒரு மனிதனின் / மனுஷியின் முதல் ஆறு, ஏழு வருடங்களில் அவனின் / அவளின் எதிர்கால ஆளுமையின் அத்திவாரம் பெரும்பான்மையும் இடப்படுகின்றது. எமது தாய், தந்தையர், நெருங்கிய முக்கிய மனிதர்கள், எமது ஆளுமையை நன்மைக்கோ, தீமைக்கோ பெரியளவில் சிறிய வயதிலேயே பாதித்து விடுகிறார்கள். நாம் வளர்ந்து முதிர்ந்தவர்களான பின்னரும் எம்முள் எமது "கடந்தகாலக் குழந்தை" ஒன்று "உயிருடன்" உள்ளது. அதனால் அத்தாக்கங்களுடன் நாம் வாழவேண்டுமென்ற நியதி இல்லை. உளவளத்துணையுடன் நாம் அத்தாக்கங்களில் இருந்து விடுபட்டு ஒரு சுதந்திர உணர்வுடன் வாழலாம், வளரலாம். அங்ஙனம் வாழவும் வளரவும் உள்ளார்ந்த ரீதியாக நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

**கேள்வி 15 : வன்முறைச் சூழலில் வளரும் ஒரு குழந்தையின் உளநலம் எவ்வாறு பாதிக்கப்படலாம் என நினைக்கிறீர்கள்?**



பதில் : வன்செயல் சூழலில் வாழும்/வளரும் ஒரு குழந்தை வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இது பல ஆய்வுகளின் பயனாகக் கண்டு கொண்ட முடிவு. வளர்ந்து வரும் குழந்தை வன்செயலில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் கூடுகின்றன. கோபம், நித்திரையின்மை, நித்திரையில் குழம்பல், தனிமையில் பயம், பெற்றோரில் தங்கி வாழும் வாழ்க்கை (dependency) பயம், ஏக்கம், தவிப்பு, பயங்கரக் கனவுகள், கல்வியில் கவனம் செலுத்த முடியாமை, என்று பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டு, குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது.

**கேள்வி 16 : எவ்வித பிரச்சினைகளுமற்ற நல்ல மனித சமுதாயத்தை எவ்விதம் உருவாக்கலாம்?**

பதில் : எவ்வித பிரச்சினையுமின்றி ஒரு சமுதாயமும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க முனைவது வெறுங் கனவு. பிரச்சினைகளினூடாக மக்களை வளர்க்க முனைவது தான் உளவளத்துணை.

**கேள்வி 17 : இன்றைய நவீன யுகத்தில் இனம், சமயம், கலாசாரம் ஆகியவை ஒரு மனிதனுக்கோ அல்லது சமுதாயத்திற்கோ எவ்விதம முக்கியமானது என நினைக்கிறீர்கள்?**

பதில் : ஒருவனுடைய / ஒருத்தியுடைய இனம், சமயம், கலாசாரம் ஆகியவை அவன் / அவளுடைய தனித்துவத்தை, அவர்களுடையவேறுன்றியதன்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவர்களுடைய ஆளுமை வளர்ச்சிக்கு வேரூன்றிய தன்மை உதவி புரியும். ஆனால், இன, சமய, கலாசார வெறிகள் சமூகத்திற்குத் தேவையற்றவை, வேண்டாதவை. பதவி ஆசைகொண்டு திரியும் அரசியல்வாதிகள் இவ்வெறிகளை உருவாக்கி அரசியல் இலாபம் தேடுவார்கள். மக்களும் இப்படிப்பட்ட வெறிகளுக்கு இலகுவாக ஆளாகிவிடுகிறார்கள். வெளிப்படுத்தப்படாத எமது சக்தி பெரும்பாலும் அழிக்கும் செயல்களில் ஈடுபடத் தூண்டிவிடப்படுகின்றது.

**கேள்வி 18 : இன்று எமது சமுதாயம் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் இன்னல்களுக்கு தீர்வு எவ்விதம் அமைய வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

பதில் : இடியப்பச் சிக்கலாகிவிட்ட எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இலகுவான காரியமல்ல. பொதுமக்கள் சுயமாகச் சிந்திக்கப் பழகவேண்டும். தமக்குள்ள சக்தியையும் அதிகாரத்தையும் (power and authority) அரசியல்வாதிகளிடம் முழுமையாகக் கொடுத்துவிடக்கூடாது. எமது வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு எங்களுடையதாகவே அமைய வேண்டும். மற்றவர்களுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் நாம் மதித்துக் காக்க வேண்டும். அனைத்துக்கும் அடிப்படையாகவிருக்கும் மனித அன்பை, கருணையை, ஆதரவை, மன்னிப்பை அர்த்தங்கொண்டு வாழும் ஒரு வாழ்க்கையை நாங்கள் வரவேற்க வேண்டும். எமது மனித மதிப்பீடுகளை நாங்கள் வளர்க்க வேண்டும், பரப்ப வேண்டும். மற்றவர்கள் வாழ்க்கையில் அழையாமல் நுழைந்து குழப்பக்கூடாது.

## வெளிநாடுகளில் ஈழத்தமிழர்

**கேள்வி 16 : இன்று எம்மவர்கள் பல நாடுகளுக்குச் சென்றுள்ளனர்: சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களது எதிர்காலம் எப்படி அமையும் என எதிர்பார்க்கிறீர்கள்? (கலாசார சீரழிவு உட்பட).**

பதில் : வெளிநாடு செல்லும் எம்மவரை மூன்றுவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். 60 களிலும் 70 களிலும் சென்ற படித்தவர்கள் - நல்ல தொழிலில் இன்று வாழ்பவர்கள். இப்பொழுது செல்பவர்களில் கல்வி நன்கு கற்றோரும் உண்டு, கல்வியைக் குறைவாகக் கற்றோருமுண்டு. முப்பகுதியினருக்கும் வெவ்வேறு பிரச்சினைகள் உண்டு. அந்நியநாடு, அந்நிய சூழல், அந்நிய மொழி, அந்நிய வாழ்க்கைமுறை, அந்நியக் கலாசாரம், விரைவாக மாறிவரும் உலகளாவிய ஒரு கலாசார சூறவழி என்று, பல்வேறு தாக்கங்கள் இவர்களை ஆட்கொள்கின்றன, கொழும்பு நகரத்தின் சூழலையே முற்றாகப் பார்க்காத பலர் இன்று திடீரென்று இரவோடிரவாக இலண்டனில், நியூயோர்க்கில், ரொறொன்ரோவில், மொன்

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஓவியம் ஒரு பரிசோதனைக் களம்

கொ. றெ. கொன்ஸ்ரன்ரைன்

மார்கழிமாதம் 11 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை விமல் அலுத்வெல (Wimal Aluthwela) வின் 45 ஓவியங்கள் கொழும்பு லயனல் வென்ட் கலாபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவர் கேகாலை மாவட்டத்தில் பிறந்தவர். கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் ஓவியத் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்று, தற்போது கிராகம பயிற்சிக் கல்லூரியில் ஓவியத் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

சிறீலங்காவின் ஓவியப் பாங்கில் தொடர்ச்சியாகக் காணப்படும் தன்மைகளிலிருந்து, இவரது படைப்புகள் பெருமளவில் வித்தியாசப்பட்டு நிற்கின்றன.

இங்கு வைக்கப்பட்டிருந்த 45 ஓவியங்களும் அண்மைக் காலப் படைப்புகளானபடியால், இவரது வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டும் பாங்கில், இக் கண்காட்சி அமையவில்லை. இவற்றில் பெரும்பாலானவை அரூபத் தன்மையானவை; சில பகுதி அரூபத் தன்மையானவை.

இவர் 'போவிஸ்டு'களைப் போல் வெம்மையான வர்ணங்களையே பாவிக்கின்றார். குருத்துப் பச்சை, மஞ்சள், பிரகாசமான சிவப்பு,பச்சை போன்ற வர்ணங்களை மிகவும் துல்லியமான சமநிலையில் பாவிக்கின்றார்.வர்ணப் பரம்பலில் காணப்படும் இச்சமநிலை, இவருக்கு ஓவியத்துறையிலிருக்கும் பரிச்சயத்தை நன்கு வெளிக்காட்டுகிறது.

தூரிகை இவருக்கு ஒரு பொருட்டாகப் படவில்லைப் போலும். பெரும்பாலும் விரலினாலேயே வர்ணத்தைப் பூசுகிறார். நிறங்களும் கோடுகளும் ஏற்படுத்தும் ஒத்திசைவு மனத்தினில் பதிந்து, ஓவியத்திற்கு அப்பாலும் எங்கோ இழுத்துச் செல்கிறது. ஓவியங்களின் தலைப்புகள் இந்த மனவோட்டத்தினைத் தடைசெய்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவரது ஓவியங்களில் நிறங்களும் கோடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. உருவங்கள் எங்கோ ஒளிந்துபோய்விடுகின்றன.

சில ஓவியங்களில் இவர் ஏகவர்ணத்தினைப் பாவித்துள்ளார். இவரது இப்பரிசோதனையை 'தனிமை' (Loneliness), 'கடைசிக் குழந்தை' (Last Child), கமக்காரன் (Farmer), அழகி (Beauty) போன்றவற்றில் காணக்கூடியதாக இருந்தது.

இவரது 'சுதந்திரத்'தில் (Liberty), ஏகவர்ணத்தின் வெவ்வேறு சாயங்களிற்கு இடையே இவர் வெளிக்கொணரும் ஒத்திசைவு, அற்புதமாக உள்ளது. ஏகவர்ணப் பரிசோதனைகள் பிக்காசோவினால் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இவரது படைப்புகளில் உருவங்கள் எல்லைகளை இழந்து ஓவியப் பரப்பினில் எங்கும் வியாபித்திருப்பதில், பிக்காசோவின் பாணியிலிருந்து அடிப்படைகளில் வேறுபடுகின்றன.

## கலைச்சாரல்

கோடுகளும் நிறங்களும் ஏற்படுத்தும் லயங்களினை இவரது 'இசைக் கலைஞனி'ல் காணக்கூடியதாயுள்ளது. 'பெண்', 'ஒளி' ஆகிய ஓவியங்களில் இவர் ஜக்சன் பொல்லொக் (Jackson Pollock)கைப்போல், தெளித்தல் பாணியைப் பின்பற்றியுள்ளார். முழுமையாகத் தெளித்தல் முறையைப்பின்பற்றாவிடினும் பதித்தல், பூச்சு முறை என்பவற்றுடன் கலந்தே பாவித்துள்ளார்.

ஓவியத்தில் முப்பரிமாணத் தன்மையினைக் கொண்டுவரும் முயற்சியே இவரது முக்கிய பரிசோதனைக் களமாகும். இதனை எய்துவதற்கு இவர் மெழுகினைப் பயன்படுத்துகின்றார். மெழுகின் உதவியுடன் தளப்பரப்பிலிருந்து உருவங்களை உயர்த்துகிறார். சில இடங்களில் மெழுகுடன் வர்ணங்களைச் சேர்த்துள்ளார்; வேறுசில இடங்களில் மெழுகிற்குமேல் வர்ணத்தைப் பூசியுள்ளார். ஈற்றில், மரப் பலகையில் குடையப்பட்டதைப் போன்ற தோற்றத்தை, இவரது இந்த மெழுகுச் சேர்க்கை ஓவியங்கள் எய்துகின்றன.

இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த 45 ஓவியங்களில் 12 இத் தன்மையானவை. இவற்றில் 'சல்லாப நேரம்' (Time for a chat) என்ற ஓவியத்தினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த ஓவியத்தில், வர்ணம் சேர்க்கப்பட்ட, மெழுகினை ஒரு முனையிலிருந்து வழிந்தோடச் செய்துள்ளார். இது, ஜக்சன் பொல்லொக்கினது 'தெளித்தல் பாணி'யைப் போன்ற பிறிதொரு'வழிதல் பாணி' எனலாம்.

இம் முயற்சிகள், இவரது படைப்பாற்றலினையும் புதிய ஊடகங்களைக் கண்டறிவதில் உள்ள நாட்டத்தினையும் வெளிக்காட்டுகின்றன.

ஓவியத்தினை ஒரு பரிசோதனைக் களமாகக் கொண்டு செயற்பட்டுவரும் விமல் அலுத்வெல, சிறீலங்காவின் ஓவிய மரபில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தப் போவது திண்ணம். □

# சித்த மருத்துவத் துறையின் கலை நிகழ்ச்சிகள்

இணுவையூர்,
சிதம்பர திருச்செந்திநாதன்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் நான்காவது ஆண்டு விழாவும், சித்தமருத்துவம் 1988 - 89 மலர் வெளியீடும், 14/12/89 ஆம் திகதி கைதடியில் நடைபெற்றது.

மலர் வெளியீடும் அதனோடு தொடர்புடைய ஆய்வுரைகளும் காலையில் நடைபெற பிற்பகலில் கலைநிகழ்ச்சிகள் சுவைஞர்களுக்கு விருந்தாக(?) அமைந்தன.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைக்கு ஐந்து வருட வரலாறுதான் உண்டு. அது காரணமாகவும் மிகக்குறைந்த மாணவர்களுடன் அத்துறை இயங்கி வருகின்றது.

என்றாலும் கலைத்துறையில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வமும் அக்கறையும் பாராட்டுக்குரியது. ஆனால் அவர்களின் கலைத்தேடலுக்குத் துணைபோகக்கூடிய — செம்மைப்படுத்தக்கூடிய — வசதிகளும் வாய்ப்புக்களும் குறைவாக உள்ளன என்பதை அவர்களது கலை நிகழ்ச்சிகளைப் பார்த்தபோது அறியமுடிந்தது.

அன்றைய கலைநிகழ்ச்சிகளில் முதலாவதாகச் செல்விகள் பி.பத்மலோஜனி, எஸ். ராஜீவி எஸ். ரேணுகா, எஸ். திரிபுர நாயகி பங்குகொண்ட பூஜா நடனம் நடைபெற்றது.

ஆர்வம் உள்ள மாணவிகள்; ஆனால் போதிய பயிற்சியின்மையை அவர்களின் நடனம் வெளிக்காட்டியமை கவனத்திற்குரியது.

நடனத்திற்கான பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பாயிற்று. அதுகாரணமாகக் கூட்டிசை. பாடல் என்பன நடனத்துடன் ஒத்துழைக்கவில்லை. இவ்வாறான ஒலிப்பதிவு நாடாவுடன் நடனமாடும் முயற்சி வெற்றி பெறுவதற்கு கூர்மையான பயிற்சி தேவை.

விரிவுரையாளரின் சிறப்பு நிகழ்ச்சி என்ற பெயரில், விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் தனி நடிப்பு (தனி நடிப்பா அது?) இடம்பெற்றது. ஆண்டாண்டு காலமாக நம் கலைஞர்கள் சிலர் அரைத்த மாவையே க. நாகேஸ்வரன் அவர்களும் அரைத்துள்ளார். நாகேஸ்வரன் போன்றவர்கள் இவ்வகையான சங்கடங்களில் சிக்குப்படுவது வியப்பாக உள்ளது.

சபையோர் சிரிக்கின்றார்கள் என்பதற்காக எல்லாவற்றையும் மேடையில் காட்டமுடியாது. (சமீப காலமாக மேடைப் பேச்சுக்கள் இவ்வகையாகவே சிரிப்புடன் தான் போகின்றது. சிரிக்க வைத்து விட்டால் நல்ல பேச்சாளியாகி விடலாம்) வயதுபோன பண்டிதர் நடனம் ஆடிக்காட்டுவது அபத்தமான செயலாகும்.

சித்த மருத்துவத்துறை ஊழியர்களின் வில்லிசை நிகழ்ச்சி ''நாகரீகம்'' என்ற பெயரில் நடைபெற்றது. கலை ஆர்வமுள்ள இளைஞர்கள் யாரோ ஒரு பிரபல வில்லிசைக் கலைஞரை மனதில் வைத்துக் கொண்டு செயற்பட்டிருக்க வேண்டும் (!) வில்லிசைப்பது வேறு; வில்லிசைப்பதாக நினைத்துக்கொண்டு மேடையில் நடிப்பது வேறு.

கோயில் திருவிழாக்களில் நித்திரைக் கலக்கத்தில் இருக்கும் பக்தர்களை (?) தட்டியெழுப்ப மலினப்படுத்தப்பட்ட வில்லிசை பயன்படுத்தப்பட்டு வந்தது. அத்தகைய வில்லிசைக் கலைஞர்களையே இந்த இளைஞர்களும் மேடையில் காட்ட முனைந்தது வருத்தம் தரும் செயலாகும்.

அவர்கள் எடுத்துக்கொண்ட கருப்பொருளே ''அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல'' இருந்தது. உண்மையான அக்கறையுள்ள இளைஞர்கள் தகுதியானவர்களின் நிகழ்ச்சிகளைப் பார்த்து — கேட்டு — ஆராய்ந்து — உரிய முறையில் தம்மைச் சீர்ப்படுத்த வேண்டும்.

அன்றைய நிகழ்ச்சிகளின் இறுதியில் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் ''தாயுமாய் நாயுமானார்'' என்னும் நாடகம் சித்த மருத்துவத் துறை மாணவர்களால் மேடையேற்றப்பட்டது. நாடகத்தை நெறிப்படுத்தியவர் கந்தையா ஸ்ரீகணேசன் ஆவார்,

''தாயுமாய் நாயுமானார்'' நாடகம் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்ட நாடகம்; எமது சமூகத்தில் பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கும் மனோபாவத்தை இது ஆராய்கிறது.

யாழ்ப்பாணத்து நாடகச் சூழலில் நாடகப் பிரதிகள் தட்டுப்பாடாக இருப்பது கவனத்திற்கெடுக்க வேண்டிய விடயமாகும். எனவே தான் மீண்டும் மீண்டும் ஒரு சிலரின் நாடகப் பிரதிகளே மேடைக்கு வருகின்றன.

போதியளவு ஒத்திகையின்றி மேடையேற்றப்பட்டதாலோ என்னவோ, நாடக நடிகர்களின் பேச்சு சில இடங்களில் இயற்கையாக அமையவில்லை.

இது போன்ற குறுகிய நேரத் தயாரிப்பு நாடகங்களுக்கு இத்தனை நாடக மாந்தர்கள் அவசியமா? சுந்தரலிங்கம் பரமேஸ் தம்பதியினர் வெறுமனே இடைக்கிடை ஒவ்வொரு வசனம் பேசுவது, நாடகத்துடன் ஒட்டவில்லை. அவர்களை நாடகத்தின் பிரதான மாந்தர்களுடன் இயங்கவிட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். (சுந்தரலிங்கம் பால் வாங்கப் போவதுபோல்)

நாடகப் பிரதியில் இருந்த இறுக்கத்தினை நாடக நெறியாளராவது சற்றுத் தளர்த்தியிருக்கலாம் போலத் தோன்றுகின்றது. சுந்தரலிங்கத்தின் மனைவி பரமேஸ் பேசிய வசனங்களில் சில, உச்ச தொனியில் இருந்ததுபோல, சில தாழ்ந்ததொனியில் அமைந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

பெண்களின் அடிமை நிலையை சிலவகை உத்திகளுடன் இந்த நாடகம் உருவகப்படுத்துகின்றத. ஆனால் எவ்வளவு தூரம் பார்வையாளர்கள் மனதில் அதன் மையக் கருத்து தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும்?

மொத்தத்தில், அன்றைய நிகழ்வுகளில் தனித்துவம் பெற்ற நாடகத்தினைத் தயாரித்த சித்தமருத்துவத்துறை மாணவர்கள், நடிகர்கள், நாடகப்பிரதியை எழுதிய குழந்தை ம. சண்முகலிங்கம், நெறிப்படுத்திய கந்தையா ஸ்ரீகணேசன், பாடகர்கள், இசைவழங்கிய கோ. சத்தியன், ஞா. நந்தகுமார் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். □

## நிலைமை

ஜாக்கிரதை,
நாய்கள் கடிக்கும்.
கவனமாய்ப் போய்வா.
நாம் கடிக்காவிட்டாலும்
நாய்கள் கடிக்கும்.

'தோப்பு விரும்பா விட்டாலும்
காற்று சும்மா விடாது.'

வாழப் பழகிக் கொள்.
இதயத்தைச் சுற்றி
கவசம் போட்டுக் கொள்.
நெஞ்சை மூடிவிட்டு
வாயினுல் பேசு.
வார்த்தைகளுக்கு
உயிரில்லாவிட்டால்
உனக் கென்ன;
உயிரொன்றும்
அவ்வளவு முக்கியமானதல்ல.

வாழப் பழகிக் கொள்.

## ஹாட்லி

எரிக்கப்பட்ட உள்ளங்களின்
சாம்பல்களிலிருந்தும்
இங்கு
சரித்திரம் பிறக்கும்:
புற்கள் படர்ந்து
புழுதி இறுகி
நீர் வற்றியுலர்ந்து
காடுகளாக்கப்பட்ட கழனியிலும்
நெற்கதிர் தோன்றும்.
இது
நிரூபிக்கப்பட்ட உண்மை.
வெட்டி முடியாது
இது
வாழைகள் போல
வாழப்பிறந்த இனம்
மீண்டும் தழைத்துவரும்.

வகுப்பறைக்கனவுகள்
சுமந்த இதயங்கள்
இன்று
வெறுப்புகள் சுமந்து
வெறுமையை உணர்ந்து
இருளையே நோக்கினும்
விழிகளில் ஒளிவளம்
சிதைக்கப்பட்ட கோலங்களை
சித்திரமாகத் திருத்த
இந்தச்
சின்னஞ்சிறுசுகளுக்குத் தெரியும்.
இங்கு
விதைக்கப்பட்ட வித்தெல்லாம்
விருட்சங்களாவது
விதிக்கப்பட்ட விந்தைகளே.

(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு, ஜனவரி 18-ஆம் திகதி கொண்டாடப்பட்டது)

— சி. திருவாகரன் □

## எரிந்த பின்னர்.....

விடி விளக்கின்
அருகில்
மிக நெருங்கி...... நெருங்கி......

சுடரின் மிடுக்கு
சுவாலையின் சுகந்தம்
ஒளியின் வெளிர்
உஷ்ணத்தின் கதகதப்பு.

இதமான சுகம்.
மேனியில் மெல்லிய நெருடல்
நாசியில் நறுமணம்.

விடி விளக்கின்
அருகில்
மிக நெருங்கி...... நெருங்கி......

உண்மையில்
எல்லாம் ஓர் மாயைதான்.
இவையெல்லாம்
எரிந்த பின்னர்தானே
புரிகிறது.

ஹூம்......

— கலைவாதி கலீல் □

## தூவானம்

○ 'ஃப்றேம்வேர்க்' சஞ்சிகை
○ தர்மபோதனைக்கு வியாஸங்கள்—பாரதி

உலகின் பல பாகங்களில் பிரபலமான ஃப்றேம்வேர்க் (Framework) என்ற சஞ்சிகை, இலங்கைத் திரைப்படத்துறைக்கென்று ஒரு சிறப்பிதழை வெளியிட்டுள்ளதென, தி ஐலன்ட் பத்திரிகை மூலம் தெரிய வருகிறது. இச்சிறப்பிதழினல் உலகெங்கிலுமுள்ள திரைப்பட ஆர்வலர்களின் கவனம், இலங்கைத் திரைப்படத்துறையின் மீது படியும் சாத்தியமும் ஏற்பட்டுள்ளது.

இதன் அதிதித் தொகுப்பாளர்களாகச் செயற்பட்ட றொபேர்ட் குருஸ், அஷ்லி ரத்ன விபூஷண ஆகிய இருவரின் செயற்பாட்டின் விளைவே இச் சிறப்பிதழாகும்.

இதிலுள்ள முக்கிய கட்டுரைகள் வருமாறு: 'நெருக்கடியும் கலாசார நடைமுறையும்' — றொபேர்ட் குருஸ்; 'சிங்கள சினிமாவின் வரலாறு' — எட்வின் ஆரியதாஸ; 'அரசும் சினிமாவும்' — அஷ்லி ரத்ன விபூஷண; 'இலங்கையின் கலாசார, அரசியல் விவாதங்களில் சினிமா' — ஜயதேவ உயங்கொட; 'இலங்கைச் சினிமா — நிகழ்கால எதிர்காலக் காட்சி' — ஏ. ஜே. குணவர்தன; 'இலங்கைச் சினிமாவில் பெண்கள்' —சுனிலா அபயசேகர; 'யதார்த்தத்தைச் சிறைப்பிடித்தல் — தர்மசேன பத்திராஜவின் மாற்றீடான சினிமா': பியல் சோமரத்ன.

இதைத்தவிர புகழ் பெற்ற நடிகைகளான சுவர்ண மல்லவாராச்சி, அனோஜா வீரசிங்க; இயக்குநரான திஸ்ஸ அபயசேகர ஆகியோரின் செவ்விகள் இடம் பெற்றுள்ளன.

கே. எஸ். சிவகுமாரனின் 'இலங்கைத் தமிழ் சினிமா'; காவலூர் ராசதுரையின் 'இலங்கையில் தமிழ்த்திரைப்படத் தயாரிப்பின் நிலைமை' என்ற கட்டுரைகள் சேர்க்கப்பட்டிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. இச்சிறப்பிதழில் எனக்கு மிகச் சுவாரஸ்யமான விடயமாகத் தெரிவதென்னவென்றல், அதன் அட்டைப்படமேயாகும். யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட பொன்மணி என்ற தமிழ்ப்படத்தின (இதன் இயக்குநர் தர்மசேன பத்திராஜ என்ற சிங்களவர்) இறுதிப் பகுதியில் வரும் — லோங் ஷொட்டில் அமைந்த— மரண ஊர்வலக் காட்சியே அட்டையில் இடம்பெற்றிருக்கிறது! □

## நிலாம்பரன்

'கலையா? பிரச்சாரமா?' என்ற பிரச்சினை, இன்றும் மாற்றுப்பெற்று விட்டதாகத் தெரியவில்லை; ஆனுல் சிறிது தணிந்திருக்கிறதெனக் கூறலாம்.

எழுபதுகளுக்கு முன் (பிரபல எழுத்தாளர்களால்) எழுதப்பட்ட (இலங்கைச்) சிறுகதைகள் சிலவற்றை, ஒரு தேவைக்காக சமீபத்தில் படிக்க நேர்ந்தது. முற்போக்கு, பிற்போக்கு (?!), நற்போக்கு என அடையாளம் காட்டப்பட்டவர்களின் பல படைப்புகள் ஏமாற்றமே தந்தன கதைகள் சொல்லப்படுகின்றன, கருத்துக்கள் சொல்லப்படுகின்றன; ஆனுல் கலைஞனின் அனுபவத்தை — கலைநயத்தை — வடிவ அமைதியைத்தான் காண முடியவில்லை. அன்று முதன்மைப் படுத்தப்பட்ட சமூக, அரசியல் கருத்துக்கள் காலமாற்றத்தில் தம் கவர்ச்சியையும் இழந்து விட்டன. வெறும் கருத்துக்களால் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. சமூகப்பார்வை, அரசியல் பார்வை, நீதி போதனை உள்ளவைதான் இலக்கியங்களாக முடியும் என்று வெறுமனே வற்புறுத்தப்பட்டதன் விளைவே இது.

ஆனுல், தமிழ்ச் சிறுகதை தோற்றம் பெற்ற அரம்ப நாட்களில் 'சிறுகதை' வடிவத்தைக் கையாண்ட முன்னேடிகளில் ஒருவரான பாரதியாரின் பின்வரும் கருத்தொன்று, இன்று பார்க்கும் போதும் ஆச்சரியத்தினைத் தருகிறது; அன்றைய நிலையிலும் அவர் தெளிவாகவே சிந்தித்திருக்கிருர்: "பொதுவாக நான் கதைகள் எழுதும்போது, வெறுமனே கற்பனை நயத்தைக் கருதி எழுதுவது வழக்கமேயன்றி ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதும் வழக்கமில்லை. தர்ம போதனைக்கு வியாஸங்கள் எழுதுவேன். கதையென்றெடுத்தால் கற்பனைப் புனைவையே அதில் நான் முக்கியமாகக் கருதுவேன்."

வியாஸங்களை அல்லது வியாஸங்களின் பகுதிகளை "இலக்கியம்" என்ற பெயரில் எமது எழுத்தாளர்கள் எழுதும் போதுதான், பிரச்சாரம் என்ற பிரச்சினையே வருகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல கொம்யூனிஸ்ற் எழுத்தாளரும் விமர்சகருமான சிதம்பர ரகுநாதனின் கருத்தை இங்கு தருவதும், பொருத்தமானது. அவர் இவ்வாறு சொல்கிருர்: "நல்ல கருத்தை மட்டும் பிரதிபலிப்பதால் ஒன்று நல்ல இலக்கியமாகிவிடுவதில்லை. நல்ல கலையழகோடு பிரதிபலிப்பதுதான் நல்ல இலக்கியமாகும். மனிதனின் மகோன்னத உணர்ச்சிகளைச் சிறந்த சொல்லோவியமாக்கும் இலக்கியங்களும் அழிவதில்லை. இலக்கியம் வெறும் விளம்பரமல்ல இலக்கியத்தை விளம்பரக் கருவியாகப் பயன்படுத்த முனையும்போது அந்த இலக்கியம் கருவிலேயே செத்து விடுகிறது. விளம்பரம் மட்டுமே மிஞ்சுகிறது கலை செத்துவிடுகிறது. விளம்பரம் செய்வது மட்டும் கலையாகிவிடாது. விளம்பரத்தையும் கலையழகோடு செய்யும் போதுதான் இலக்கியமாகிறது."

(அடிக்கோடுகள் என்னல் இடப்பட்டவை) □

## ஒருங்கிணைந்த...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

றியோவில்,பாரிசில்,உரோமில், ஜெனிவாவில், ஒஸ்லோவில், என்று பலபெரிய நகரங்களில் இடம் பெயர்ந்து நடப்படுகிருர்கள். இவர்கள் ஒருவகையான கலாசார அதிர்ச்சிக்குள்ளாகிருர்கள். (cultural shock). முறையான கணி புகளின்றி, இவர்களுடைய மதிப்பீடுகளும் ஒழுக்க முறைகளும் சடுதியாக மாறுகின்றன. இம் மாற்றங்கள் தொடக்க காலத்தில் இவர்களுக்கு ஒரு கவர்ச்சியாக அமையினும், கால வோட்டத்தில் அம்மாற்றங்களே அவர்களுக்குப் பிரச்சினைகளாக மாறுகின்றன. தனிமை, வெறுமை, விரக்தி, வாழும் நாட்டுடன் ஒட்டாத தன்மை (சேர்த்துக் கொள்ளப் படாத ஒரு சூழல்): ஒருங்கிணையாத கலசார மோதல்களில் சிக்கி தம்மையே இழத்தல், என்று பல்வேறு பிரச்சினைகளை மேற்கொள்கிருர்கள். திருமணம் செய்யத் துணையின்றித் தவித்தல், மதுபோதை வஸ்துகளுக்கு அடிமையாகக் கூடிய சூழல், பணம் கருதி வேலைமயமான வாழ்க்கை, தாழ்வு மனப்பான்மை, மூன்ருந்தரப் பிரஜை என்ற உணர்வு, முன்சென்ற மூத்த குடிகளுக்கும், பின்சென்ற இளைய குடிகளுக்கும் இடையே ஏற்படும் மோதல்கள், இப்படி இவர்களின் "பரிதாபத்துக்" குரிய நிலைகளை வர்ணித்துக் கொண்டே போகலாம் ..... இவர்களுக்கு உளவளத்துணை மிக அவசியமாயிருக்கும்,

**கேள்வி 20 : உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

**பதில் :** வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவங்கள் சில உண்டு. இவற்றை விரிவாக வேறிடத்தில்தான் குறிப்பிட வேண்டும். ஆனுல், ஓர் உண்மையை நான் அனுபவித்துள்ளேன். அதாவது, ஒருவனின்/ஒருத்தியின் வாழ்க்கையில் ஒரு சிக்கல் (crisis) வரும்பொழுது அச்சிக்கலை ஒரு வாய்ப்பாகவே (opportunity) கருத வேண்டும. அச்சிக்கலில் இருந்து வளரவும் முடியும். அச்சிக்கலில் இருந்து வீழ்ச்சியடையவும் முடியும். வளர்ந்தது எனது அநுபவம்,

### முடிவாக

**சுகுமார் :** நன்றி

**கரவையூர் செல்வம் :** பார்க்கப்போனல் நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நான் சாந்திகத்திற்கு வரவும், இங்கு பொறுப்பேற்றுப் பணிபுரியவும் தூண்டுகோலாக இருந்த சிலரில், நீங்களும்முக்கியமானவர். ஆற்றல்களை அடையாளங்கண்டு அவை மக்களுக்குப் பெருமளவில் பயன்பட வேண்டும் என்று, ஆர்வம்கொண்டு செயற்படும் உங்கள் சமூக உணர்வை, நான் பாராட்டுகிறேன். அத்துடன் இச் செவ்வி மூலம் எமது நிறுவனத்தையும் (சாந்திகம்) எமது பணியையும், பரவலான ஒரு சமூகத்திற்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டுமென்ற உங்கள் நல்லெண்ணத்தையும் பாராட்டுகிறேன்.

உங்கள் வினுக்கள் விரிவான விடைகளைத் தேடுபவை. ஒவ்வொரு வினவிற்கும் ஒரு நீண்ட விரிவுரையே கொடுக்கலாம். அதுவும் உளவளத்துணை எமது சமூகத்திற்கு ஒரு புதிய துறையாதலால், விளக்கங்கள் விரிவாக்கப்பட வேண்டும் என்று எண்ணுகிறேன். "திசை" வாசகர்கள் விரும்புவார்களானுல் விரிவான கட்டுரைகளை எழுதுவோம்.

நன்றி. வணக்கம். □

திசையின் சிறுகதை

# கேள்வி

எஸ். பி. சிவனேஷ்

மாமி இன்றைய காலைக் கடன்களுடன் இன்றொன்றையும் சேர்த்துக் கொண்டாள். காலங்காத்தாலேயே ஆவேசப் பாய்ச்சல். எரிச்சலைப் பிரதிபலிப்பதற்கு அதைத் தவிர்ந்த வேறு எந்த முகமும் அவளுக்கு கைவந்ததாய் இல்லை. இன்றைய எரிச்சல், தன்னைக் கலந்து கொள்ளாமலே முடிவெடுத்து விட்டார்களே என்பதால்.

கத்தினாள். "இனிமேல் இனஞ்சனம் தேவையில்லையெண்டே கைவிட்டிட்டியளோ?" சுவர்களில் போல, மனங்களிலும் கம்பியதிர்ச்சியை ஏற்படுத்திய கத்தல்.

ஆளுக்கொரு மூலையைப் பிடித்துக்கொண்டிருந்த மகேஸ்வரிக்கும், இரண்டு பெண் பிள்ளைகளுக்கும், தங்கள் பார்வைகளுக்குத் தரையைத்தான் காட்ட முடிந்தது. முகத்தைப் புதைத்துக் கொள்ள பூமியைத் தேர்ந்தெடுத்தனர். 'இக்கட்டான நிலைகளில் முகத்தை எங்காவது புதைத்துக் கொள்ளுங்கள்' என்ற போதனை பெற்ற நடுத்தர வர்க்க சிஷ்யர்களாய் இருப்பது இவர்களுக்கு எப்போதும் சுலபமானது; வசதியானது. நாலாவது பெண் சுமதி முகத்தைப் புதைத்துக் கொள்ள அன்றைய தினசரியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறாள். பத்திரிகை படிப்பதாய் பாவனை. சேர்ந்து வர மறுத்து, மனம் மாமிக்குக் காது கொடுத்துக்கொண்டிருக்க, எழுத்துக்களில் தடம் பதித்துப் போனது கண்கள் மட்டும்தான். பக்கத்தில் சுதர்ஸன் —கடைக்குட்டிப் பையன் — மட்டும் மாமியை நேரிடையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பேச்சு விபரம் அறிந்திருந்தாலும், இன்னும் பயிற்றுவிக்கப்பட்ட நடுத்தர விலங்கென்ற நிலைக்கு வந்திராத வயது. அவனால் அப்படிப் பார்க்க முடிகிறது.

மாமி அபூர்வப் பெண் வகையைச் சேர்ந்தவள். ஆண் எதேச்சாதிகாரத்துள் கிடந்து அழுந்தும் பெண்கள் ஒரு வகை; இதுதான் பெரும்பான்மை. அபூர்வமாய் ஒன்றிரண்டு குடும்பங்களில் மட்டும், தலைகீழ் முறையாய் எதேச்சாதிகாரம் பெண் கையில். இந்தமாதிரி அபூர்வம்தான் மாமி. கணவனும் பிள்ளைகளும், அவளால் கீறப்படுகிற கோட்டைத் தவிர மற்றவற்றைக் கவனிக்கக் கூடிய திறனை, அநேகமாக இழந்து விட்டவர்கள். இந்த அல்லி ராணிக்கு இருக்கக் கூடிய கொள்கைப்பற்று என்னவெனில், தன் உறவைச் சார்ந்த குடும்பங்களும்கூட தன் கோட்டை மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியவர்களாய் இருக்க வேண்டும் என்பது. தவிர, ஆவேசப் பாய்ச்சலுடன் வெடுக்கென்ற பேச்சையும், கட்டையில் போகும் போதும் கைவிடப்படக்கூடாத சொத்தைப் போலப் பேணி வருகிறவள். 'மென்மையாகப் பேசுதல்' என்பது மூட நம்பிக்கையென்று நம்புகிறவளோ என்னவோ! பிறகு ஊர் சான்றிதழ் தராதா, 'படு பொல்லாத மனிசி' என்று? சிறுவர்களுக்குத் தெரிந்த வகையில் 'அல்சேஷன் நாய்'

"கொண்ணற்றை மூத்தவளுக்கும், புளியடி ராசையாவின்ரை மோனுக்கும் எழுத்து முடிஞ்சுதாம், மெய்தானே?" என்று ஊர் வாய் விசாரித்த போதுதானே விஷயத்தைத் தெரிந்துகொள்ள முடிந்தது என்றால், அத்தகைய மாமிக்கு மூக்குநுனியில் கோபம் வந்ததில் ஆச்சரியமில்லை.

"அவங்கள் ஆர்; நாங்கள் ஆர்? எங்களோடை கொண்டாட்டம் வைக்கிற அளவுக்கு தகுதி உள்ளவங்களா அவங்கள்?" 'தடிச்ச வெள்ளாளர்' என்ற அபரிமிதமான இறுமாப்பைக் கேள்விகளில் நிறுவினாள். இவர்கள் கணக்குப்படி புளியடி இராசையா குடும்பமும் வேளாள சாதிக்குள் வர முடிந்தது. ஆனால், வேளாளருள்ளும் குறைச்சலான வேளாளர்கள் இருக்கிறார்களாம்; மாமி கேட்டது அந்த அடிப்படையில்.

மாமியால் சுற்றி வளைத்துத்தான் வர முடியும். அவளது கொள்கைப் பற்றில் செதுக்கிக் கொண்ட முகத்தை, நேரடியாய்க் காட்டி விடத் தயாரில்லை. "என்னைக் கலந்து கொள்ளாது ஏன் செய்தீர்கள்" என்கிற எரிச்சல் முகத்துக்கு, "அவங்கள் ஆர்; நாங்களா?" என்கிற முகமூடி. முகம் பகிரங்கமாய் இருந்து போனால், "நீ யார் எங்களைக் கேட்க?" என்கிற உதாசீனச் சம்மட்டி தூக்கப்பட்டு; முகம் தகர்க்கப்படலாம் என்கிற பீதி மாமிக்கும் இருக்க முடியாதா?

"எங்களைக் கண்டால் எவ்வளவு மரியாதை குடுக்கிறவங்கள்; இனி மூஞ்சைக்கு நேரா கைவீசிக்கொண்டு நடக்கப்போறாங்கள். ச்சீ ...... ச்சீ, ஊரெல்லாம் மூக்கால சிரிக்கப்போகுது!" அவளுடைய நியாயத்திற்கு ஊரும் அவளுக்கு இழுபட்டு வர, வசதியான முண்டு.

பதில் சொல்லிச் சமாளிக்காமல் தப்பமுடியாது. "எங்களுக்கே எல்லாம் முடிஞ்ச பிறகுதான் தெரியும். இனி நாங்கள் என்ன செய்யேலுமெண்டு தான் ......"

தயக்கத்தையும் வார்த்தைகளையும் மாறி மாறி மகேஸ்வரி விழுங்கினாள். உள்ளுக்குள் முகம் எரிச்சல் சூளைச் செங்கட்டியின் உறவாகிக் கிடந்தது. பொருளாதார மிதப்பிலுள்ள குடும்பத்தின் உரிமையாளர், மாமியின் பார்வைக்கு அதைத் தீனியாக்கத் தயாராயில்லை. வெளியில் பணிந்து போகிறதாய் ஒரு முகமூடி.

மகேஸ்வரியின் வார்த்தையில் ஒரு பகுதி உண்மை உண்டு. மூத்தவள் மாலதியின் திருமணம் ரவீந்திரனால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷயம். வெளிநாட்டிலிருக்கும் ரவீந்திரன் மகேஸ்வரியின் மூத்த மகன். தான் போய்ச் சேர்ந்த இரண்டாவது வருடத்தில் தங்கையையும் தன்னுடன் அழைத்துக்கொண்டான்.

மாலதியின் வரவுக்கு முன்பிருந்தே ரவீந்திரனிடம் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பவன், கூட வேலை பார்க்கும் செல்வகுமார். ஒரு நாள் மனந்திறந்து ரவீந்திரனிடம் பேசினான். அவளைப் பார்த்த அன்றே பிரியம் ஏற்பட்டதை; போகப் போக அவளது குண நலன்கள் பிடித்துப்போனதை, எதனையும் மறைக்கவில்லை.

ரவீந்திரனுக்கு அவன் மேல் நல்லபிப்பிராயம் உண்டு. இன்னொரு விஷயம் ஊர்க்காரன் என்பது. அவனால் உடனடியாக சம்மதம் தெரிவிக்க முடிந்தது. 'மூன்றாம் மனிதனான தரகன் தருகிற நற்சான்றறிக்கையை நம்பி எங்கோ ஒரு ஊரில் முன்பின் அறியாத அந்நியன் ஒருவனுடன், தொல்லைகளையும் வீட்டுக்குள் அழைத்துக் கொள்வதை விட, முதலும் முடிவுமாய் அறிந்த ஒருவன் என்றால் நல்லது தான்' என்பது அவனது சம்மதத்திற்கு அடித்தளம் கொடுத்தது.

ரவீந்திரனின் தகவலை கடிதம்தான் வந்து மகேஸ்வரிக்குச் சொன்னது. "மாலதியைக் கேட்டிருக்கிறார்கள் அம்மா. மாப்பிள்ளை நல்ல பெடியன். சீதனமாய் ஒரு சுண்ணாம்புக் கட்டியைத் தன்னும் வாங்க மாட்டேனென்று சொல்கிறார். மாலதியின் சம்மதமும் உண்டு. உங்களுடைய அபிப்பிராயம் என்ன?"


பதில் எழுதினாள்: "ஆளின் குணம் நடை நல்லாய் இருக்குமென்றால் பிறகென்ன? உனக்கு திருப்தி என்றால் எனக்கும் சரி தான்" என்று எழுதியவள், கூடவே ஒரு சுய கௌரவப் பிரச்சினையை முன்வைத்தாள். "அவர்கள் வேண்டாம் என்பதற்காக நாங்கள் விட்டுவிட முடியுமா? எங்களால் இயன்றளவுக்கு ஏதாவது சீர்வரிசை செய்யத்தானே வேண்டும்!" அநாவசிய சுய கௌரவங்கள் இவர்களுக்கு முதுகெலும்பு. இது இல்லாமல் நிமிர்ந்து நடக்க முடியாத விநோத விலங்குகள்......

"உங்களைக் கேட்காமல் அவன் தன்ரை எண்ணத்துக்குச் செய்து வெச்சவனே? நீங்கள்தான் எல்லாத்தையும் மூடிமறைச்சுப் போட்டியள்."

மாமியின் வாதத்துக்கு முன்னால் பிரதிவாதம் என்பது மௌனத்தைத் தவிர வேறொன்றாய் இல்லை. மௌனம்!...... தொல்லைகளை எதிர்கொள்ள முடியாத கோழைகள் பதுங்கிக் கொள்ள, வசதியான போர்வை. மாமிக்கும் தான் வசதியாக இருந்தது. தடையில்லாமல் கத்தமுடியும்.

"வேறை வழியில்லையெண்டு அவங்களிட்டை போனனீங்களே மாப்பிள்ளை எடுக்க?"

தினசரிக்குள் புதைத்த முகத்தை மீட்டுக் கொள்ளச் சக்தியற்று; கண்களை மட்டும் சட்டென்று உயர்த்தித் தாழ்த்தினாள் சுமதி. "இவவிட்டை போயிருந்தா தன்ரை மகனைக் கட்டி வெச்சிருப்பாவாக்கும்?" தன்னைத் தாண்டி சத்தம் போய்விடக் கூடாதென்ற முன்னெச்சரிக்கையில் அது முணுமுணுப்பாய் இருந்தது. ஆனால் நெருங்கியிருந்த சுதர்ஸனின் முதுகைத் தட்டிவிட்டது.



"ஏனக்கென்றுக்கு என்ன?" துள்ளிப் பாய்ந்தது. "அப்ப முதல்லேயே குகன் மச்சானை பெரியக்காவுக்குக் கட்டி வெச்சிருக்கலாமே நீங்கள்?" முக மூடி ஒன்றைச் சுவீகரித்துக் கொள்ளத் தெரியாத முகம், முழு நிர்வாணமாய் நிறுத்தி விட்டது கேள்வியை. அக்காமார் மூவரும் அவனை உலக அதிசயங்களில் ஒன்றாய்ப் பார்த்தனர்.

உள்ளே வெலவெலத்துப் போய் விட்டது மாமியின் முகம். ஆனால் அதனைக் காட்டிக் கொள்ளத் தயாராய் இல்லை. "உனக்கும் வர வர வாய் நீளுது என்ன?" அதட்டினாள், உன் கேள்வி என்னை ஒன்றும் செய்து விடவில்லைப் பாங்கில்.

உடன் பிறந்த அண்ணனின் மகள் என்பதற்காக பொன் முட்டையிடும் வாத்தைத் தாரைவார்க்கத் தயாரானவள் அல்ல மாமி. அவளது மகனுக்கு — லண்டன் மாப்பிள்ளைக்கு — கல்யாணச் சந்தையில் இருக்கக் கூடிய பெறுமதி சிறுவனுக்குப் புரியாது. ரொக்கம், காணி, வீடு, வளவு நகை, என்று பெரும் அளவீட்டுப் பட்டியலைக் கூறாய் மகேஸ்வரி முன் நீட்டுவதற்கு. எந்த முகத்தை; எங்கே தேட முடியும் அவள்?. அப்படி ஒரு எண்ணம், இவர்கள் மனதில் விழுந்து விடாது பிடித்துக் கொள்வதற்கு, உடும்பைக் குருவாகக் கொண்டவள். ஊரின் பேச்சிலும் கூட அசன் சாரம் தன்னுள் கலந்துவிடாத முன்னெச்சரிக்கைக்குக் கையாண்ட பிரயத்தனங்கள், அவன் மட்டும்தான் அறியக் கூடியது. பிறகு, சர்வசாதாரணமா?.

சுதர்ஸன் அதட்டியதுடன் மாமியின் பேச்சு இயலாமைக்கு இரையாகி விட்டது. நிர்வாணமாக்கப்பட்டுப் போன அவமானம் அவளுக்கு அடிபடும் பாம்பாய் உள்முகம் நெளிந்தது. இன்னும் கொஞ்சம் தாமதித்தால், மற்றவர்களும் கூட திருப்பிக் கேட்டு விடக் கூடும் என்ற பீதி, அவளை உசுப்பியது. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமலே நடையைக் கட்டினாள். இப்போது, நடையில் மட்டும்தான் ஆவேசப் பாய்ச்சலைக் காட்ட முடிந்தது அவளால். □

## திருத்தம்

சென்ற வாரத் 'திசை'யில் 12ஆம் பக்கத்திலுள்ள சேவையும் பணிவும் என்ற கட்டுரையின், 'நீங்கள் இதை எப்படிச் செயற்படுத்தினீர்கள்?' என்ற கேள்விக்குரிய பதிலாக, பின்வருவனவற்றைக் கொள்ளவும் — ஆர்

பதில் : நான் வங்கியில் 1942இல் இருந்து கடமையாற்றியவன். எனக்குக் குறிஞ்சிக் குமரன் கோவிலைக் கட்டுவதில் சிரமமிருக்கவில்லை.

தோட்ட முதலாளிமார், வர்த்தகப் பிரமுகர்கள், தனவந்தர்கள், சர்வகலாசாலை மாணவர்கள் போன்றோரின் ஊக்கமும். பேராசிரியர்களின் இடையறாத உழைப்பும் இருந்தபடியால், குறிஞ்சிக்குமரன் அருளால் இப்பெரிய தொண்டை என்னால் "வெற்றிகரமாக" நிறைவேற்ற முடிந்தது என்றே நினைக்கின்றேன். "குறிஞ்சிக்குமரன் எங்களை ஆட்டுவித்தார். நாங்கள் ஆடினோம்—."

# திசை — அறிவுப் போட்டி இல. 2

## போட்டி விதிகள்

1. பல்துறை சார்ந்த பொது அறிவில் ஆர்வத்தை ஏற்படுத்துவதே போட்டியின் நோக்கமாகும்.
2. பாடசாலை மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்.
3. ஒருவர் விரும்பிய தொகையான விடைத்தாள்களை அனுப்பலாம். ஒவ்வொரு விடைத்தாளுடனும் போட்டிக்குரிய விண்ணப்பப் படிவம் தனித்தனியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். (படிவம் 11ஆம் பக்கத்தில்).
4. முடிவு திகதி 29/1/1990
5. சரியான விடைத்தாள் பரிசுக்குரியதாகத் தெரியப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைத்தாள்கள் கிடைக்குமிடத்து, பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
7. 1ஆம் பரிசு — ரூபா 50/=
   2ஆம் பரிசு — ரூபா 30/=
   3ஆம் பரிசு — ரூபா 20/=
   பரிசுகள் காசுக்கட்டளைகள் மூலம் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.
8. போட்டி தொடர்பாக கடிதத்தொடர்பு மேற்கொள்ளப்படமாட்டாது. □

## வினாக்கள்

1. சங்ககாலத் தமிழ் நூல்களின் இரண்டாவது தொகுதி பத்துப்பாட்டு ஆகும். பரிசில் பெற விரும்புவோன் ஒருவனைப் பரிசில்பெற்று வருவோன் வள்ளலிடம் ஆற்றுப்படுத்தும் செய்தியை விரித்துக் கூறுவது, ஆற்றுப்படை என்பது பொதுவிதி. பரிசில் பெறுவோன் பெயராலேயே ஆற்றுப்படையின் பெயர் அமையும். இதிலிருந்து மாறுபட்டதாக இத்தொகுதியில் உள்ள நூல் எது? இம்மாறுபாடு யாது?
2. சூரிய ஒளிக்கதிரிலுள்ள புறஊதாக் கதிர்கள் தோலில் படும்போது, தோல் ஒரு விற்றமினை (உயிர்ச்சத்தை) உருவாக்குகிறது வெயிலில் கிடைக்கும் உயிர்ச்சத்து எது?
3. தமிழ் எழுத்துக்களின் அமைப்பிலுள்ள சில முரண்பாடுகளை நீக்கி ஒரு சீர்மைமையை (Uniformity) ஏற்படுத்தும்முறை தமிழகத்திலும் வேறுசில நாடுகளிலும் நடைமுறையிலுள்ளது. முரண்பாடுகளை நீக்குவதற்காக மாற்றப்பட்ட பதின்மூன்று எழுத்துக்களையும் தருக?
4. அண்மையில் அமைதிக்கான (சமாதானம்) நோபல் பரிசு ஒரு மதத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத் தலைவர் யார்?
5. தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப்பரப்பைச் சங்ககாலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், விஜய நகர நாயக்கர் காலம், என ஈழத்து இலக்கிய வரலாற்று அறிஞர் ஒருவர் பாகுபாடு செய்தார். தமிழக இலக்கிய வரலாற்றுளர் சிலர், இம்முறையைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு பாகுபடுத்திய ஈழத்தறிஞர் யார்?
6. உருசியா முதன்முதலாக ஒரு பெண்மணியை வானவெளிக்கு அனுப்பி மீட்டது. இப் பெண்மணி யார்? □

## அறிவுப் போட்டி இல.1 சரியான விடைகள்

1. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, என்பன எட்டுத் தொகை நூல்கள்.
2. அமெரிக்கரான தோமஸ் அல்வா எடிசன் மென்லோ பூங்காவின் மந்திரவாதி எனப்பட்டார். முதன் முதலாக மென்லோ பூங்காவில் நகரமக்களின் முன்னிலையில் வெண்சுடர் ஒளிரும் மின்குமிழ்களை (incandescent lamps) ஒளிரச் செய்து காட்டியதால் அவ்வாறு அழைக்கப்பட்டார். சமகாலத்தில் இங்கிலாந்தில் சேர் யோசப் சுவான் என்பவரும் மின்குமிழைக் கண்டறிந்தார்.
3. Umbrella என்ற ஆங்கிலச்சொல் இலத்தீன் மூலச்சொல் ஒன்றிலிருந்து தோன்றியது. சிறு நிழற் பகுதி (a piece of shade) என்பது இதன் பொருள்.
4. அல்பிறட் பேணுட் நோபல் என்பது நோபல் பரிசை நிறுவிய சுவீடிஷ் நாட்டு இரசாயனவியல் அறிஞரின் பெயராகும். 1901 ஆம் ஆண்டு டிசம்பர் பத்தாம் திகதி முதன்முறையாக இப்பரிசு வழங்கப் பெற்றது.
5. ஈழத்தில் எழுந்த முதலாவது தமிழ்நூல் சரசோதி மாலை என்ற சோதிட நூல் ஆகும். இதனை எழுதியவர் சரசோதி மைந்தரான பண்டித போசராசர் என்பவர். இந்நூல் ஈழத்தில் சோழர் ஆட்சி நிகழ்ந்த பதின்மூன்றாம் நூற்றாண்டில் தம்பை மாநகர் எனப்பட்ட தம்பலகாமத்தில் எழுந்ததாகலாம்.
6. கிறீஸ் நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரில் நவீன ஒலிம்பிக் தொடரின் முதலாவது நிகழ்ச்சி நடைபெற்றது. □

## போட்டி முடிவுகள்

பரிசுக்குரியவர்களாக இருவர் தெரியப்பட்டுள்ளனர். பரிசுத் தொகையான ரூபா 100/= சமமாகப் பகிரப்பட்டு ரூபா 50/= வீதம் இருவருக்கும் வழங்கப்படுகிறது.

1. இ. அனுரதன்,
   60, புதுவீதி, அத்தியடி,
   யாழ்ப்பாணம்.
   பாடசாலை: யாழ். இந்துக் கல்லூரி.
2. அ. அருணோதயன்,
   மே/பா. வீ. கே. சின்னத்தம்பி,
   சண்டில், கரவெட்டி மேற்கு,
   கரவெட்டி.
   பாடசாலை: ஹாட்லிக் கல்லூரி. □

# இளவட்டம்

## வேண்டாத விடியல்

எப்போதும் போலத்தான்
வெறுமையுடன் விடிந்தது காலை.
கடமைக்காக ஒரு சேவல்
கம்மல்களுக்கிடையில் குரலை உயர்த்திற்று.
வேண்டாத விடியலென்று புறுபுறுத்தபடியே
கிழட்டுப்பூனை மூலையில் முடங்கிற்று.

அடையாளம் காணப்படாது கிடந்த சடலத்தை
அறிவித்துக் கொண்டு
என் வீட்டு முற்றத்தின் மேலாக
தாழப் பறந்தது கொக்குறுப்பான் குருவியொன்று
யாரோ வளைக்கப்போட்ட மாமிசத்துண்டை
கடித்துக் குதறி, சப்பி, மென்று
ஈற்று வாயோரம் இரத்தம் கசிய
இற்றை நாள் பசியைத் தீர்த்த திருப்தியில்
வீற்றிருந்தது வீதிநாயொன்று.

கோடிப்பக்கப் பனைமரத்தில்
கூடு கட்டிய காக்கையொன்று
கூட்டினை யாரோ கலைத்து விட்டதாய்
கூறி சுலோகம் கூடி இசைத்தது.

சிறிது தொலைவில்,
பளுவினைத்தாங்கும் வலுவினையிழந்து
இலைகளைச் சருகாக்கிய விருட்சமொன்று
இற்றை நாள் சோகத்தை தன்னுடலில் விரித்திருந்தது.

— இரஞ்சி இராஜநாயகம் □

## குமுறும் உள்ளத்திலிருந்து.........

என்னால் தாங்க முடியாதது ஏமாற்றம்.
எனக்கு வேண்டும் இதில் மாற்றம்.
இறைவா! உனக்கேன் என்மீது கோபம்?
நிம்மதியைத் தேடியே அலைகிறேன் — அந்த
சந்நிதியை எனக்குக் காட்டுங்கள்
எந்நிதியும் தந்திடுவேன் — எனக்கொரு
நன்நீதி கிடைத்திடுமா ?

பேதை என் மனமோ தவிப்பிலே,
என் வேதனையில் சிலர் களிப்பிலே,
சிலரின் உன்னத நடிப்பிலே,
மயங்கிய மனம் இன்று தவிப்பிலே.

— பூமகள் துரைசிங்கம் □

## பட்டினிப் புயல்

விலைகள் ஏற்றம் - இப்போ
விரைவாய் நடக்கிறது
சம்பள உயர்வோ
குறைவாய் இருக்கிறது.
முதலாளி வாழ்க்கையோ
முன்னேற வழியுண்டு
ஏழைகள் வாழ்க்கை
ஏக்கத்தில் கழிகிறது.

இவர்களை அடித்துச் - செல்ல
பட்டினிப்
புயலொன்று பயங்கரமாய்
வருகிறது —
பணவீக்க வெள்ளமும்
கூட வருகிறது.

— மந்துவிலூர் சிவா □

## நிலை

எனக்கு
சிரிக்கத்தெரியும்
ஆனாலும் நான்
அழுது கொண்டிருக்கிறேன்.
எனக்குப்
பேசத்தெரியும்
ஆனாலும் நான்
பேசாதிருக்கிறேன்.
எனக்கு
எழுதத்தெரியும்
ஆனாலும் நான்
எழுதாதிருக்கிறேன்.

— நல்லூர் தாஸ் □

## சிகரெட்

நீ
என்னு தட்டில்
அடிக்கடி
முத்தமிட்ட போதெல்லாம்
நான்
நினைத்திருந்தேன்
நீதான் அமிர்தமென்று !

இப்போது
நோய் முற்றியபின்
புரிகிறது
நீ விஷமென்று !
வெளிப் போர்வைகளால்
எல்லாமே மயக்கங்கள்
உள்ளுருவம்
தெரிந்த பின்னர்
அத்தனையும்
விளக்கங்கள் !

— ரவி □

## சிறையும்—மீட்சியும்

ஒவ்வொரு ராத்திரிகளும்
நான் சிறைக்குச்
சென்ற
அநுபவந்தான் ........
இருட்டு; கும்மிருட்டு
தொடராய் இருட்டு......
பகல் வரும்வரை
அதே இருட்டுத்தான்.,

விடிந்த பொழுதினில்
இருட்டு நம்மை
விட்டகலும்.....
தொடர்ந்தும் இருட்டின்
இராத்திரிகள் வரும்......
வந்து கொண்டேயிருக்கும்
காலை மலர்வதில் என்ன
பயன் கண்டோமோ?

விடியலேயில்லாத
காலைப் பொழுதினில்
சிறை மீண்ட அநுபவமும்
வரும் ... ஆயினும்
சிறை மீண்டுமல்லவா ?

— கவிக்கோ □

தந்தை : நீ அப்படிச் சண்டை செய்யக் கூடாது. நீ கொடுத்து எடுத்துப் பழகிக்கொள்ள வேண்டும்.

மகன் : நான் அதைத்தான் செய்தேன். நான் அவனுக்கு ஒரு உதை கொடுத்து அவனுடைய மாம்பழத்தை எடுத்தேன்.

JAFFNA COLLEGE
Institute of Technology
VADDUKODDAI.

The full time professional Engineering Course preparing students for E. C. E. (London) Part I & II Examinations will commence in February, 90.

Weekend Courses are provided for working Students.

Students of both sex, with minimum 3 passes in G. C. E. (A/L) Maths can apply.

Lectures, Practicals & Project Work are conducted by well-qualified Engineers.

Library, Hostel & Sports facilities are available.

Apply on forms available at Office before 31-01-90

Director.

A/12/90

# நவீன இடதுசாரிப் போக்கும் அதன் மூன்றாவது நோக்கும்

இன்றைய இலங்கை அரசியலில் நவீன இடதுசாரி இயக்கம் எத்தகைய போக்குகளைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பது பற்றி இலங்கையில் நவீன இடதுசாரி சிந்தனையின் அண்மைக்கால ஞானசிரியனான தயான் ஜயதிலக சில சிந்தனைகளை முன் வைத்துள்ளார்.

தயான் ஜயதிலகவின் பார்வையின்படி, இன்றைய இலங்கை அரசியல், இரண்டு ஆயுத அமைப்புகளினது போர்க்களமாக மாறியுள்ளது. ஒன்று ஆயுதபாணிகளான ஜே.வி.பி. அடுத்தது, ஆயுதம் ஏந்திய இலங்கை யு. என். பி. அரசின் பாதுகாப்புப் படைகள். இந்த இரண்டு போராட்ட அமைப்புக்களுக்குள் எஸ்.எல்.எவ்.பி, எம்.ஈ.பி., எஸ் எல் எம்.சி., ஈ.பி ஆர்.எல்.எவ்., எல். ரி. ரி. ஈ, ஈரோஸ், போன்றவை எப்பக்கத்துக்குச் சேர்மானமானவை என்பது பற்றி ஒருவர் ஐயுறலாம்.

ஆனால் தயானின் பார்வையின்படி, இன்றைய 1990இன் நவீன இடதுசாரிக் கோட்பாடென்பது ஒரு புதிய மூன்றாவது பார்வை அல்லது போக்கைத் தரிக்க வேண்டியதாய் உள்ளது இவரின் இந்நோக்கானது, எஸ்.எல்.எம்.பி. கட்சியின் தலைவரான காலஞ்சென்ற விஜய குமாரணதுங்கவின் சிந்தனையே இன்றைய நவீன இடதுசாரிப் போக்கு எடுக்க வேண்டிய மூன்றாவது பக்கத்தைக் காட்டுவதாகக் கொள்கிறது. அண்மையில் இவரால் பிரசுரிக்கப்பட்ட விஜயகுமாரணதுங்கவின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் கொண்ட ஓர் சிறிய புத்தகம், இலங்கைக்குத் தேவையான 21ஆம் நூற்றாண்டுக்குரிய சோஷலிசச் சிந்தனைகளைக் கொண்டதாக இவரால் கருதப்படுகிறது.

இன்றைய புதிய சிந்தனையானது, மரபுவழிவரும் சோஷலிசச் சிந்தனை கைக்கொள்ளும் மக்களின் மந்தைத்தனமான கூட்டு நோக்கை உடைக்கிறது; தனி மனிதனின் விடுதலையில் உருவாகும் மக்கள் சக்தியைக் கோருகிறது இதை வலியுத்த தயான் கொம்யூனிஸ்ட் அறிக்கையில் பிரகடனப்படுத்தப்பட்ட, "சகல மக்களினதும் சுதந்திர வளர்ச்சிக்கு, தனி ஒவ்வொருவரதும் சுதந்திர வளர்ச்சி முன்னவசியமாகிறது" என்ற மார்க்ஸ்—ஏங்கல்ஸ் கோட்பாட்டைக் காட்டுகிறார். கூடவே, "உண்மையான புரட்சிவாதி என்பவன் உன்னதமான மக்களின்பால் எழும்-அன்புணர்வால் தூண்டப்படுபவன் ஆவான்" என்ற சேகுவேராவின் மேற்கோளையும் காட்டும் இவர், இந்த அடிப்படையில் பார்க்கும் போது, இலங்கையில் இதற்கும் பொருத்தமானவர் "விஜயவீர அல்ல, விஜயகுமாரணதுங்கவே", என்கிறார்.

இவரது நவீன இடதுசாரி, மூன்றாம் பக்கப் பார்வையானது, வர்க்கப் பார்வைக்குள் அடங்காத ஒடுக்கப்பட்ட பல்வகை மக்கள் தொகுப்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வது முக்கியமான ஒன்றாகும். இத்தகைய ஒடுக்கப்பட்டவர்களாக பெண்கள், மாணவர்கள், சிறுபான்மை இனமக்கள், நாடற்றவர், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகள், ஊனமுற்றோர், கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறே இவர், முதலாளித்துவத்தை வெறுமனே மரபுவழிவந்த அரசியல், பொருளாதார நோக்கில் விமர்சிப்பதன் போதாத் தன்மையைச் சாடுகிறார். இவற்றோடு சமூக, கலாசார, இயற்கைச் சூழல் போன்றவற்றின் தாக்கமும் தற்போது கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கூறுமிவர், ஜேர்மனியில் பசுமைக் கட்சி அண்மையில் வெற்றி பெற்றதை, இலங்கையிலுள்ள இடதுசாரிகள் கவனிக்க வேண்டும் என்றும், இனி வரும் அவர்களது போராட்டச் சுலோகம் "எங்கள் கன்னிக் காடுகளை அழிக்க வேண்டாம்" என்று அறை கூவும்— நமது சுற்றாடலைப் பாதுகாக்கும் — சுலோகமாக அமையலாம் என்றும், கூறுகிறார்.

மேலும் தனது நவீன இடதுசாரி நோக்கின் மூன்றாவது பார்வையை விளக்கிச் செல்லும் தயான், "திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதாரத்தை" வெகுவாகக் கண்டிக்கிறார். இதற்கு இன்று, கொர்பச்சேவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "மறுசீரமைப்பும்" 'சுதந்திரக் கருத்தோட்டமும்" அவரிடம் ஊன்றியுள்ள செல்வாக்கும் ஒரு காரணமாகலாம். இதை உறுதிப்படுத்த இவர் இன்று நிகராகுவாவில் ஆட்சியை நிறுவியுள்ள சான்டினிஸ்டை உதாரணம் காட்டுகிறார். பல் நோக்கு அரசியலையும், கலப்புப் பொருளாதாரத்தையும், அணிசேரா நோக்கையும் தமது கொள்கைக் கோட்பாடுகளாகக் கொண்டு இவர்கள் பதவிக்குவர முடியுமானால், ஏன் இத்தகைய கோட்பாடுகள் இலங்கை இடதுசாரிகளுக்கு தீவிரமாற்றத்துக்குரியவையாக இருக்கக் கூடாது, எனக் கேட்கிறார் இவர்.

இன்று இலங்கையில் எஸ். எஸ். எவ். பி. கலப்புப் பொருளாதாரத்தைத் தனது கொள்கையாகக் கூறுகிறதென்றால், அதற்குப்பிரதியீடாக பொருளாதார ஜனநாயகத்தை தயான் முன்வைக்கிறார். பொருளாதார ஜனநாயகம், பல்நோக்கு அரசியல், சமூக ஜனநாயகம் ஆகிய மூன்று பண்புகளே இன்றைக்குத் தேவைப்படும் மாற்றுகளாக, இவர் முன்வைக்கிறார். இவரது பொருளாதார ஜனநாயகம் என்பது அரசின் ஏகபோகக் கட்டுப்பாட்டை நீக்கிய கூட்டுப்பங்குதாரர் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி போன்றவற்றால் நிர்வகிக்கப்படும் பொருளாதார அமைப்பாகும். இவரது இப்பொருளாதார நோக்கை 'புதிய பொருளாதாரக் கொள்கை' எனக் கூறலாம். இப்புதிய பொருளாதாரக் கொள்கை (NEP) இடதுசாரி நோக்கிற்கு மாறுபட்டதல்ல. இதன் முன்னோடியாக லெனினே திகழ்கிறார், என தயான் கூறுகிறார்.

இன்று யு. என். பி நவீனப்படுத்தப்பட்ட அரசியல் சக்தியாகத் திகழ்வதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, பிரேமதாஸவின் ஜனசவிய போன்ற "மக்கள் பொருளாதாரக்" கொள்கையாகும்.

இப்படிப் போகும் தயானின் சிந்தனைக் கோட்பாடு, இறுதியில் வாசகருக்கு ஓர் பெரும் அதிர்ச்சியையே தருகிறது. அதாவது, இன்று "புதிய மக்கள் சக்தியின் புரட்சிக்குரியவர்" களாக அவரால் காட்டப்படுபவர்கள், பிலிப்பைன்ஸ் தேசத்து அக்கினோ, பாகிஸ்தானின் பெனாசிர் பூட்டோ போன்றவர்களாவர். இவர்களது சாதனையே இவர்களுக்குத் தேவையான புரட்சிக்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்படவேண்டும் என அவர் கூறுகிறார்.

அப்படியானால் இவரது கூற்றிலிருந்து இலங்கையில் இதைச் செய்யக் கூடியவராக இருப்பவர் எஸ். எல். எம். பி. தலைவரான திருமதி சந்திரா குமாரணதுங்க எனக்கொள்ளலாமா?

நன்றி: சண்டே ஐலன்ட் □


"தொழிற் பயிற்சிகள்"

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்வாய்ப்பு பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

* COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 4 மாதம்
* றேடியோ, ரெலிவிஷன், வீடியோ, டெக் றிப்பயறிங். காலம்:- 6 மாதம்
* றீவைண்டிங்
ரான்ஸ்போமர், மின்விசிறி, மின்மோட்டர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்
* எலெக்றிக்கல் வயறிங்
வீட்டு மின்சாரவேலை, மின்சாரப் பொருட்கள் என்பன திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 2 மாதம்
* DIPLOMA IN DRAUGHTSMANSHIP
காலம்:- 4 மாதம்

பயிற்சி முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

A/L, O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

பயிற்சிகள் ஆரம்பம்: 24 01-90 (கிழமை நாட்கள்)
21-01-90 (சனி, ஞாயிறு)

பயிற்சிகள் கூடிய நேரம் செய்முறைப் பயிற்சியுடன் மிகவும் இலகுவான முறையில் பயிற்சியளிக்கப்படும்.

விபரங்களுக்கு:—
JAFFNA TECHNICAL INSTITUTE,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை)


## தமிழாராய்ச்சி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் செயலாளர் எஸ்.பேரம்பலம் அவர்களால் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையின் பேரில், தீவு அடங்கலுமுள்ள தமிழ்த் திரைப்பட மாளிகைகளின் திரைகள் வாயிலாக வெளியிடப்பட்டது. தினசரி மூன்று காட்சிகளைக் காண்பிக்கும் திரைப்பட மாளிகைகளது ஒத்துழைப்புக்கு முன்பாக, தேசிய தினசரிகளால் நடாத்தப்பட்டுவந்த இருட்டடிப்பு தாக்குப்பிடிக்க முடியவில்லை. மாநாட்டையொட்டிய பண்பாட்டுக் கண்காட்சியில் இடம்பெற வேண்டிய வர்த்தகக் கூடங்கள் யாவும் ஓரிரு தினங்களில் முற்றாகப் பதிவு செய்யப்பட்டன.

இதன்மேல்தான் மாநாட்டுக்காக வந்திருந்த வெளிநாட்டுத் தமிழாய்வாளர் சிலர் நாடுகடத்தப்பட்டதும், அவர்கள் தத்தம் நாடுகளில் தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு அளித்த பேட்டிகளால் அரசுக்கும், நாட்டிற்கும் ஏற்பட்ட அவப்பெயரை ஈடுசெய்வதற்காகாவே, வேண்டா வெறுப்பாக மாநாடு ஆரம்பமாவதற்கு மூன்றே மூன்று தினங்கள் எஞ்சியிருந்த வேளையில், மாநாட்டு அமைப்பாளர்களுக்கு மாநாட்டை நடாத்துவதற்கு, அரசு உத்தியோகபூர்வமாக அனுமதியளித்தது.

மாநாட்டுக்கு வருகைதரும் அயல்நாட்டு அறிஞர்களை வரவேற்பதற்காக யாழ் நகரையும், அதன் சூழலையும் வனப்பாகவும், சுத்தமாகவும் வைத்திருக்கும்படி அப்போதைய யாழ். மாநகர ஆணையாளர் ஏ.ரி. சுந்தரம் விடுத்திருந்த பொது வேண்டுகோளுக்கு, யாழ். குடாநாட்டு மக்களனைவருமே செவிகொடுக்கத் தலைப்பட்டனர். யாழ்ப்பாணம் இந்திரவிழாக்கோலம் எடுத்திருந்தது. சிகரங்கள், சப்பறங்கள், மின்சார அலங்காரங்கள், போட்டா போட்டியுடன் தெரு வீதிகளை நிறைத்திருந்தன. எங்கும் மங்கள ஓசையாக நாதஸ்வர இசை பிரவாகித்தது. ஓகோ என்று சொல்லும்படியாக நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய காட்சியைக் காணப் பொறுக்காத உள்ளங்கள் திரைமறைவில் தீட்டிய சதித்திட்டம்தான், மாநாட்டில் கலந்துகொண்ட அயல் நாட்டு நல்லறிஞர்களுக்கு — தமிழ் ஆய்வாளர்களுக்கு — அளிக்கப்பட்ட வழியனுப்பு விழாவில் படுபாதகத்தைப் புரிந்ததும், சம்பந்தப்பட்ட படுகொலைகளை நிகழ்த்தியதும்.

இங்கும்கூட, மாநாட்டு நிர்வாகிகள் விரும்பியதுபோன்று வழியனுப்பு விழா யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெற அனுமதிக்கப்பட்டிருந்தால், அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம், தணிக்கப்பட்டிருக்கலாம்.

மாநாட்டு நிர்வாகிகள்மீது ஆரம்பம் முதல் இறுதிவரை போடப்பட்ட நிர்ப்பந்தங்கள், தடைகளை, தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவு தினங்களின்போது தமிழ்ச்சமுதாயம் நினைவுகூர்வதும், தவிர்க்க முடியாதவோர் துன்ப நிகழ்வே. □

## இலவச பஸ் பிரயாண வசதி

கிழக்குப் பிராந்திய இ.போ.ச., பத்திரிகை நிருபர்களுக்கு பஸ்ஸில் இலவசமாகப் பிரயாணம் செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்க ஆலோசித்து வருகிறது. ஏப்றில் மாதத்துக்கு முன்னதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாம். இது இப்படியிருக்க, அம்பாறை மாவட்டத்தில் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் பத்திரிகை நிருபர்களுக்கு 1990 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலவச பிரயாண பாஸ்கள் வழங்கியுள்ளன. தென்மாகாண சபையில் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர்களுக்கும் மேற்படி மாகாண சபை இலவசமாகப் பஸ்சில் பயணம்செய்ய அனுமதி வழங்கவுள்ளது.

# Jaffna English Academy

## 9, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.

**TOEFL:**
Week-End Batch : 8 00 to 10 00 a m.
Commencement : 20 1—1990
Week-Day Batch : 2.00 to 4.00 p m. Mondays & Thursdays
Commencement : 22—1—1990 Course Fee: Rs. 450/-

### ESOL (English for Speakers of other Languages) - (LONDON)

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்குமதேவேளையில் London Certificate பெறக்கூடிய அரிய வாய்ப்பு. பரீட்சைகளை JAFFNA ENGLISH ACADEMYயிலேயே எடுக்கலாம். இதுவரை 200க்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றியுள்ளார்கள். பலர் முதன்மைச் சித்தியுமெய்தியுள்ளனர். அநேகமானோர் சாதாரண சித்தியுமெய்தியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Assessment of Answerscripts and Awards of Certificates from Pitmans, London.

* World - Wide Recognition.
* Graded Objectives to Proficiency.
* Reading—Writing Listening—Grammar etc.
* Contents carefully chosen not to penalise candidates who have not visited the U K.

Week-Day Batch : Tuesdays only: 2 to 5 p. m. Commencement : 23—1—1990
Wednesdays & Fridays: 3 to 5 p. m. Commencement : 24—1—1990
Week-End Batch : 21—1—1990 Course Fee : Rs. 350/- only.

### EBC (English for Business Communications)

* A Course designed to enhance the Candidate's skill in using the English Language in business and professional correspondence.
* More emphasize on the correct layout, tone, spelling, punctuation and the ability to use words appropriate to the situation to communicate the writer's meaning.
* Ideal course for the business and professional man and woman.
* Covers adequately the syllabi of the various professional bodies.
* Assessment of Answerscripts and award of Certificates from PITMANS, LONDON.
* World - Wide Recognition.
* Examinations Conducted at JAFFNA ENGLISH ACADEMY.

Commencement : 20—1—1990 Lectures: Saturdays : 3.30 to 5.30 p m.
Course Fee : Rs. 300/- only (For the Elementary stage)

### Spoken English (For Adults)

Week - End Batch : 10 to 11-30 a. m. Commencement : 20—1—1990
Week - Day Batch : Mondays & Wednesdays 8.30 to 10.30 a. m.
Commencement : 24—1—1990 Duration : 3 Months Course Fee: Rs, 200/- only.

### Higher English Course

Week - End Classes : 2.30 to 3.30 p. m. Fees Rs. 75/- Per Month

* Shakespeare's Romeo And Juliet
* Bernard Shaw's Arms and The Man
* George Eliot's Silas Marner
* Arthur Miller's Death of a Salesman
* Modern Short Stories
* Selected Poems
* Essays
* Letter Writing & Precis
* Comprehension Etc.

* Meticulous Coaching. * Success Assured.

LECTURES BY KANDIAH NAVARENDRAN.

### Spoken English (Higher above 14 years)

Saturdays 3.00 to 4.00 p. m. Tuesdays 4.30 to 5 30 p. m.
Duration : 3 Months. Course Fee: Rs. 150/- only.

### Spoken English (Lower - Between 9 and 14 years)

Mondays and Wednesdays 3 30 to 4.30 p. m.
Duration : 3 Months Course Fee: 150/- only.

### Elocution (Initial and Elementary Grade)

Thursdays 3.30 to 4.30 p. m.
Sundays 10.30 to 11.30 a. m.
Duration 3 months
Course Fee: Rs. 150/- only.

### Elocution (Transitional and Grade 2)

Tuesdays 3.30 to 4 30 p. m.
Fridays 3.30 to 4.30 p. m.
Duration: 3 Months
Course Fee : Rs. 150/- only.

### Elocution (Grades 3 and 4)

Thursdays 4.30 to 5.30 p. m.
Saturdays 10.30 to 11.30 a. m.
Duration 3 Months
Course Fee: 175/- only.

### G. C. E. O/L English Examination — 1990

Mondays and Wednesdays 4.30 p. m. to 6.00 p. m.
Fee: Rs. 40/- Per Month.

### Class Work:

YEARS — 2, 3 & 4 Saturdays 9.30 to 10.30 a. m. Fees: Rs. 30/- per Month
YEAR — 5 Saturdays 4.00 to 5.00 p. m.
Fridays 4.30 to 5.30 p. m. Fees: Rs. 30/- per Month
YEARS — 6 & 7 Saturdays & Sundays 8 30 to 9.30 a.m. Fees: Rs. 30/- per Month
YEAR — 8 Saturdays & Sundays 7.30 to 8.30 a. m. Fees: Rs. 30/- per Month
YEAR — 9 Saturdays & Sundays 6.30 to 7.30 a. m. Fees: Rs. 35/- per Month

LECTURES : MRS. E R. MATHER A/9/90


### 7-1-89 ஞாயிறு

எமது மக்களின் பாதுகாப்பை நாமே கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென, முஸ்லிம் கொங்கிரசின் 9 ஆவது தேசிய மாநாட்டில், தலைவர் ஏ. எச். எம். அஷ்ரஃப் தெரிவித்தார் □ புலிகள் உட்பட சகல தரப்புடனும் தமிழக முதல்வர் பேசவேண்டுமென, வே. பாலகுமார் அவரை நேரில் வற்புறுத்தினுர் □

### 8-1.90 திங்கள்

இரண்டுவருட இடைவெளியின் பின்னர் பேராதனை, மொறட்டுவ பல்கலைக்கழகங்கள் ஆரம்பமாகின. 50 வீதத்துக்கும் அதிகமான மாணவர் சமூகங்கொடுத்தனர் □ முதல்வர் அ.வரதராஜப் பெருமாள் அதிகாரிகள் சகிதம் சென்னை சென்றுர் □ வவுனியாப்பகுதியிலுள்ள கோழியகுளத்தில், விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக் கட்சித் தலைவர் 'மாத்தயா' பத்திரிகையாளரைச் சந்தித்தார் □

### 9-1-90 செவ்வாய்

நெல்லின் உத்தரவாத விலை புசலுக்கு 110 ரூபாவாக அதிகரிககப்பட்டுள்ளதாக, உணவு அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்தார் □ மட்டு—அம்பாறையில் பொலிஸ், இராணுவம் வீதிச் சோதனைகளில் ஈடுபடவில்லையென, விடுதலைப்புலிகளின் அறிக்கை தெரிவித்தது □ முதல்வர் அ. வரதராஜப் பெருமாள் தமிழக ஆளுநரைச் சந்தித்துப் பேசினுர் □

### 10-1-90 புதன்

இலங்கை இராணுவத்தில் 3 புதிய டிவிஷன்கள் உருவாக்கப்படுமென, செய்தி வெளியானது □ இரண்டு வாரங்களாகச் சீர்குலைந்திருந்த காங்கேசன்துறை—கொழும்பு ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது □ வட-கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஜோர்ஜ் தவராசா தம்பிராசாவும், இரு மெய்காப்பாளரும் திருகோணமலைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டனர் □

### 11-1-90 வியாழன்

அரசுக்கெதிரான முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது □ கொழும்பு, களனிப் பல்கலைக்கழகங்கள் இரண்டரை ஆண்டுகளின் பின்னர், மீண்டும் ஆரம்பமாகின; மாணவரின் வரவு குறைந்திருந்தது □ நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, சென்னை பயணமானுர் □

### 12-1-90 வெள்ளி

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது □ மெதுகம கிராம வாசிகளுடன் ஏற்பட்ட மோதலில் 3 இராணுவத்தினர் காயமடைந்தனர் □ எதிர்க்கட்சிகளை அழித்து சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த சதித்திட்டம் உள்ளதாக, நாடாளுமன்றத்தில் சிறிமா குற்றம் சாட்டினுர் □ இலங்கையின் இறைமையை இந்தியா பாதிக்காது. இன்னும் 2 மாதங்களில் படைவிலகல் முற்றுப்பெறுமென, மல்வத்தைப் பீடாதிபதியிடம், கண்டியில் இந்தியத் தூதர் தெரிவித்தார் □

### 13-1-90 சனி

இவ்வருடத்திலாவது சாந்தி-சமாதானம் கிட்டுமென நம்புகிறோம் என, முதல்வர் வரதராஜப்பெருமாள் தனது பொங்கல் செய்தியில் தெரிவித்தார் □ ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உறுதியான சுதந்திரமும் மலர எமது வாழ்த்துக்கள் என, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கஸ்ரோ தமது செய்தியில் கூறியுள்ளார் □

### 14-1-90 ஞாயிறு

மாத்தளையில் 17 சடலங்கள் வீதியோரத்தில் கிடந்தன □ நிரந்தர அமைதியை ஏற்படுத்த இலங்கை இந்திய அரசுகள் மூன்று தமிழர் பிரிவுகளுடன், உடன் பேசவேண்டுமென, ஈரோஸ் முக்கியஸ்தர் சங்கர்ராஜி தெரிவித்தார் □

### 15-1-90 திங்கள்

வட—கிழக்கில் தமிழர் குழுக்களின் மோதலை நிறுத்த, ஜனாதிபதியைப் 'புளொட்' சந்திக்குமென, கரவை கந்தசாமி தெரிவித்தார் □ சுற்றுடல் மாசுபடும் என்பதால் திருமலை அனல் மின்நிலையத் திட்டம் கைவிடப்பட்டதாக, திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்தார் □

---

## 'திசை' — அறிவுப் போட்டி இலக். 2
## விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

படிக்கும் பாடசாலை :- ..........................................

படிக்கும் வகுப்பு :- ..........................................

போட்டி விதிகளுக்கு அமைந்து நடப்பேன். நடுவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வேன் என உறுதிகூறுகிறேன்.

1. ..........................................
போட்டியாளரின் ஒப்பம்

2. ..........................................
படிக்கும் பாடசாலை ஆசிரியரின் ஒப்பம்

திகதி : ....................

# திசை THISAI

## இசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

## இலங்கைஇந்திய நட்புறவு ஒப்பந்தம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற நன்நோக்கு ஜே.ஆரின் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றைய பிரேமா ஆட்சிவரை இருந்து வந்தபோதும் அது நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை. ஆனால் அதைச் செயற்படுத்துவதற்குரிய சூழல் தற்போது ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அண்மையில் இலங்கை அரசு இலங்கை இந்திய நட்புறவு ஒப்பந்தத்துக்கான நகலைத் தயாரித்து இந்திய அரசிடம் கையளித்திருந்தது. இதைப் பரிசீலித்த இந்திய அரசு, தற்போது மேற்படி ஒப்பந்தத்துக்கான இன்னொரு நகலைத் தயாரித்திருப்பதாக அறிவித்திருப்பது இந்திய இலங்கை நட்புறவு ஒப்பந்தம் விரைவில் நடைமுறைக்கு வரவிருப்பதையே காட்டுகிறது.

நாடுகளுக்கிடையேயான எந்த ஒப்பந்தமானாலும் நல்ல நோக்கோடு செய்யப்படுமானால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. முன்னைய 1987 இன் ஒப்பந்தம் ஏற்படுத்திய சில கசப்புகளை நிரவிக்கொள்ளும் நோக்கத்தின் விளைவே இந்த நட்புறவு ஒப்பந்தமாகும்.

நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம் எப்போதும் அந்நாடுகளில் வதியும் எல்லா மக்களுக்கும் நன்மை அளிப்பதாக இருப்பதில்லை. குறிப்பாக அந்நாடுகளில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு இவ்வொப்பந்தங்கள் பாதகமாக அமைவது மட்டுமல்லாமல், அவர்களையே பகடைக்காயாக வைத்து காய் நகர்த்தும் ராஜ தந்திர விளையாட்டுகளாகவும் இவை அமையலாம்.

1987இல் நிகழ்ந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம், ஜே. ஆர், தனது சிங்கள மக்களையும் ராணுவத்தையும் அழியாமல் தான் காப்பாற்றியிருப்பதாகப் பெருமை பேசிக் கொண்டாலும், உண்மையில் இவ்வொப்பந்தம் அவர் மேல் திணிக்கப்பட்ட ஒன்று என்பதே ஏனைய சிங்கள அரசியல்வாதிகளினதும் மக்களினதும் அதிருப்திக்குக் காரணமாகும். அத்தோடு இந்தியா தனது சொந்தக் காரணங்களை முன் வைத்தே இவ் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதாக அண்மையில் முன்னைய இந்திய ஸ்தானிகர் டிக்ஷித் வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

இக்குறைபாடுகளை நீக்கிக் கொள்ளவே மீண்டும் இலங்கை இந்திய நட்புறவு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது என்பது தெளிவு.

ஆனால் இவ்வொப்பந்தங்களின் நோக்கங்கள் என்ன ராஜ தந்திரப் பின்னணியைக் கொண்டிருந்தாலும், அவை சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கு எதிரானவையாக அமையாது பார்த்துக் கொள்வதே முக்கியம். இரு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் நட்புறவுப் பலத்துள் அந்நாடுகளில் வாழும் சிறுபான்மை இனங்கள் சிக்கி நசியுண்ணும் ஆபத்து எப்பவும் உண்டு என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

## ஜே. வி. பியின் புதிய சதி

"ஜே. வி. பி. யைச் சேர்ந்தவர்களால் அரசுக்கெதிராகத் திட்டமிடப்பட்ட புதிய சதி, கடைசிநேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது'' என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரத்ன அறிவித்துள்ளார். அவர் இது பற்றி அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிவித்தபோது மேலும் கூறியதாவது:

அவர்களின் சதித்திட்டமானது அரசாங்க — எதிர்க்கட்சி ஆகிய இருபக்கத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளையும் கடத்தல், ஜனநாயத்துக்காகக் குரல் கொடுப்பவர்களைக் கொலை செய்தல். தகவல்களை திரித்து வெளிநாடுகளுக்கு செய்தி கொடுப்பதன் மூலம் வெளிநாடுகளின் உதவிகளை நிறுத்தச் செய்தல், தொழிற்சங்கங்களுக்குள்ளும் அரசியல் கட்சிகளுக்குள்ளும் ஊடுருவல் செய்தல் தங்களால் கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை தெருக்களில் வீசிக் காட்சிப் படுத்துவதன் மூலம் இக்கொலைகளின் பழியை அரச பாதுகாப்புப் படைகள் மேல் போட்டு மக்களைப் பயங் கொள்ள வைத்தல், இதன் மூலம் மீண்டும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, வெகுஜன தொடர்பு ஸ்தாபனங்களையும் மனித உரிமை அமைப்புகளையும் பயன்படுத்தி அரச எதிர்ப்புச் சக்திகள் மேலோங்குவதற்கு வழிவகுத்தல் என்பனவாகும்.

இத்தகைய சதி இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபடக் கூடியவர்கள் என்று எவராலும் சந்தேகப்பட முடியாதவர்களாலேயே, நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து திட்டமிடப் பட்டுள்ளது. இவை பற்றி மேலும் தகவல்கள் வெளிவர உள்ளன.

## எமது தேவை மின்சக்தியா? வன்சக்தியா?

இலங்கையில், எதிர் வரும் பத்தாண்டுகளுக்கு அதிக மின் சக்தி தேவைப்படாது'' என மின்சக்தித் துறை அமைச்சின் செயலாளரான பேராசிரியர் கே. கே. வை. டபிள்யூ. பெரேரா கூறியுள்ளார்.

இதற்குக் காரணம், இலங்கை ஏதோ மின்சக்திக்குப் பதிலாகப் பாவிக்கக் கூடிய புதிய சக்தி ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டதாக யாரும் ஏமாறத் தேவையில்லை. உண்மையான காரணம், இலங்கைப் பயங்கரவாதத்தால் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளதால், நாட்டின் தொழில், பொருளாதார அபிவிருத்தி, என்பவற்றைவிட அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு மிக முன் அவசியமான சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலை நாட்டுவதிலேயே அரசு கவனம் செலுத்த வேண்டியுள்ளதால், இவற்றுக்கு மின் சக்தி அதிகம் தேவைப்படாதெனப் பேராசிரியர் அறிவித்துள்ளார்.

## பாடசாலை வாரம்

(தை 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியை பாடசாலை வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாக, கல்வி அமைச்சின் பணிப்புரை ஒன்று கூறுகின்றது.

இத்தினங்களில் பாடசாலைகளில் இடம்பெறும் காலைக்கூட்டங்களில் தேசியக்கொடி, பாடசாலைக்கொடி ஆகியன ஏற்றப்பட்டு, பாடசாலைக்கீதமும் தேசிய கீதமும் பாடப்படும்.

பாடசாலை வாரத்தை சமய அனுட்டான வாரமாகவும் கொண்டாடும்படி பணிக்கப்பட்டுள்ளதால்; சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

பாடசாலை வளவைத் துப்பரவு செய்தல், பாடசாலைக் கட்டிடம், மதில் போன்றவற்றைத் திருத்துதல், மரம்நடுகை ஆகியனவும் இக்காலப் பகுதியில் நடைபெறும்.

இறுதி நாளன்று இலவசப் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

## பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவு நாள்

எதிர்வரும் 21/01/90 ஞாயிறு காலை 9 மணியளவில் நெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுநாள் வைபவம், கலாநிதி நா. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் யூனியன் கல்லூரியில் இடம் பெறும். வைபவத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் நாடகம், நாட்டாரியற் சிந்தனைகளின் தொகுப்பு அடங்கிய நூல் வெளியீட்டு நிகழ்ச்சியும் இடம் பெறும். இந்நூலை பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆய்வுரை செய்வார். நினைவு தினச் சிறப்புரையை பேராசிரியர் ஆ வேலுப்பிள்ளை வழங்குவார்.

## புற்றுநோய்க் கண்காட்சி

வடமாகாணப் புற்றுநோய் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் வர்த்தலைவிளான், தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோயாளர் விடுதியின் முதலாம் ஆண்டு, இம்மாத இறுதியில் பூர்த்தியாவதைக் கொண்டாடும் நோக்குடனும் பொது மக்களுக்கு இக்கொடிய நோய் பற்றித் தெரியப்படுத்துவதற்கும் இம்மாதம் 27, 28, 29, ஆகிய 3 தினங்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரைக்கும் புற்றுநோய்க் கண்காட்சி ஒன்று நடத்தப்படும்.


### கனடாவில் வேலை வாய்ப்புக்கள் VACANCIES

| | | |
|---|---|---|
| ACCOUNTANTS | கணக்காளர் | 1170 CD |
| BOOK-KEEPERS | கணக்குப்பதிவாளர்கள் | 900 CD |
| CHEMISTS | இரசாயனவியலாளர்கள் | 960 CD |
| CLERICAL WORKERS | எழுதுவினைஞர்கள் | 840 CD |
| DRIVERS | சாரதிகள் | 850 CD |
| ENGINEERS | பொறியியலாளர்கள் | 1340 CD |
| ELECTRICIANS | எலக்ரிஷியன்கள் | 1110 CD |
| FOREMEN | போர்மன்கள் | 1020 CD |
| LABOURERS | தொழிலாளர்கள் | 750 CD |
| MACHINISTS | மெஷினிஸ்ற்ஸ் | 800 CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கட்கும் ஏனைய விபரங்கட்கும் நேரில் தொடர்புகொள்க.

**AXONT AGENCY**
370, Point Pedro Road, Anaipanthi, JAFFNA.
(வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)


## புளக் தயாரிப்புக் கருவி யாழ்ப்பாணத்தில் வடிவமைப்பு

" 'புளக்' தயாரிப்பில் பயன்படுத்தப்படும் 'கோட்டிங் மெசின்' எனும் உபகருவி, மூன்று தசாப்தங்களின் முன் யாழ்ப்பாணத்தில் வடிவமைக்கப்பட்டது.''

ஊரெழு 'மதி கலைஞர் வட்டம்' நடாத்திய 'புகைப்படக் கலை' பட்டறையில், யாழ் — கொழும்பு ஸ்ரூடியோவைச் சேர்ந்த அ. குகதாசன் தமது கண்டு பிடிப்பை வெளிப்படுத்தினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''அக்காலகட்டத்தில் பத்தாயிரம் ரூபாபெறு மதியான இக்கருவி இரண்டு, மூன்று தடவைகள் செய்த சீராக்கத்தினாலேயே திருத்தமான வடிவம் பெற்றதாக இன்று பாவனையில் உள்ளது''.

பூரண ...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும், சமூக ஒடுக்குமுறைச்கும் உட்பட்டுள்ளார்கள்.

எமது மக்களின் முழுமையான விடுதலை என்பது பெண் விடுதலையோடு கூடி இருந்தால் தான், அது பூரண விடுதலையாக இருக்கும்''

## "கிராம சேவகர்களைக் கூட மாற்ற முடியவில்லை'' — பிரேமச்சந்திரன்

''மாகாண சபைகளுக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது. ஆனல் வடக்கு—கிழக்கில் மாகாண சபைக்குப் பொறுப்பானவர்கள், வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தத் தெரியாமல் இருக்கிறார்கள், என்று அரசாங்கத்தரப்பில் கூறுகிறார்கள். உண்மையில், ஒரு கிராம சேவகரை மாற்றம் செய்வதற்குக் கூட மத்திய அரசின் அனுமதியை மாகாண சபை பெறவேண்டிய நிலையிலேயே, அதிகாரம் பரவலாக்கப் பட்டிருக்கிறது.''
— இவ்வாறு பிரேமச்சந்திரன் நாடாளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிடடுள்ளார்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 19-1-1990 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J 78/89